# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,925—1970 සැප්තැම්බර් 25 වැනි සිකුරාදා—1970.9.25

14,925 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்யக்கூடியதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 867 | ஆமவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 882 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 884 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | 889 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 888 | நானாவித அறிவித்தல்கள் .. .. . | — |


## பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத விதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத விதத்தையோ அத்தோடு மேலும் 5 சத விதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½சத விதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவினும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்கும் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவிபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு ' நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் ' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. பொ. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேற

---

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு யூன் மீ 2 ந் உ.

*வதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவைக் ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கி விடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கி விடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

இல. : AB. 52/X 2277/70

## தேசிய நூதனசாலைத் திணைக்களம்

### விலங்கியல் உதவியாளர் பதவி

தேசிய நூதனசாலைத் திணைக்களத்திலுள்ள விலங்கியல் உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 1970.10.9

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1970.10.16

குறிப்பு :

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம்சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா என்பதையும் விளக்கமாகக்காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குத் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும், இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—

(அ) இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதும், விதவை, அனாதையர் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டத்திற்கு உதவு தொகை கொடுக்கவேண்டியதுமாகும்.

(ஆ) இந்நியமனம் மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் நிலையிலிருக்கும்.

(இ) தெரிந்தெடுக்கப்பட்ட அபேட்சகர், ஒரு அரசாங்க சேவையாளராக விருந்தால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பதில் பதவியென்ற ரீதியில் நியமனம் கொடுக்கப்படும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு : வருடமொன்றுக்கு ரூபா 6,720—12 × 360 உம் 11 × 480—16,320. வினைத்திறமைகாண் தடைகள் வருடமொன்றுக்கு ரூபா 11,040 க்கும் ரூபா 14,400 க்கும் முன்னர்.

குறிப்பு :

(அ) தெரிந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் அவர் விலங்கியலில் பீஎச். டீ. அல்லது எம். எஸ்சி. பட்டத்தைப் பெறுது, மேற்குறிப்பிட்டுள்ள அளவுத்திட்டத்தில் வருடமொன்றுக்கு ரூபா 11,040 ஐக் கடந்து செல்ல அருகதையுடையவராகார்.

(ஆ) தெரிந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஏற்கனவே பீஎச். டீ. அல்லது எம். எஸ்சீ. பட்டத்தைப் பெற்றிருந்தவராயின், மேற்குறிப்பிட்டுள்ள அளவுத்திட்டத்தில் வருடமொன்றுக்கு ரூபா 7,800/– சம்பளத்தில் நியமிக்கப்படுவர்.

4. தேவையான தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) 1970.10.9 ந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதைக் கடக்காதவராயுமிருக்க வேண்டும். (ஏற்கனவே அரசாங்கசேவையிலுள்ள அபேட்சகர்களுக்கு மேலெல்லை வயது வரையறை இயைபுடையதன்று).

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திலிருந்தும் விலங்கியல் முதலாம் அல்லது இரண்டாம் தரச் சிறப்புரிமைப்பட்டம், அல்லது விலங்கியலில் உயர்ந்த பட்டம் பெற்றவராயும்.

(ii) சிரேட்ட பாடசாலைத்தராதரப்பத்திரம், கல்விப் பொதுத்தராதரப் பத்திரம் அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையொன்றில் சிங்களப் பாசை அல்லது சிங்கள இலக்கியத்தில் சித்தியடைந்தவராயும் இருக்கவேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு .—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளுக் குரிய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது;

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச்சான்றிதழ்;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு : இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்;

(ஈ) உயர்தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு :

(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத்தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித்திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப் படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத்தொடர் புகளையும் செயலாளர், அரசாங்கசேவை அதிகாரசபை, என முகவரி யிட்டனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறிமிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத் தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித்திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்கசேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 1970.9.18.

9–1026—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

---

## கல்வித் திணைக்களம்

### அரசினர் சங்கீதக் கல்லூரியில் வாத்தியச் சங்கீத உதவி விரிவுரையாளர் பதவி

கல்வி அமைச்சின் கீழுள்ள அரசினர் சங்கீதக் கல்லூரியில் வாத்தியச் சங்கீத உதவி விரிவுரையாளர் பதவிக்கு, கீழே விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைத் திருப்தி செய்வோரிடமிருந்து (ஆண்/ பெண்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு 1970 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

2. இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூ. 5,016—11×144—5×180—7,500 வருடாந்தம். வருடாந்தச் சம்பளம் ரூ. 6,780 க்கு முன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு.

3. வயதுக் கட்டுப்பாடு.—விண்ணப்பதாரிகள் 18.10.1970 அன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

4. விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவராகத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) (i) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில்,

அல்லது

(ii) கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில், இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி சிங்கள/தமிழ் மொழி, எண்கணிதம்/கணிதம் உட்பட ஆறு பாடங்களில்,

அல்லது

(iii) சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

(ஆ) (i) இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஒரு சங்கீத தாபனத்தால் வட இந்திய சங்கீதத்தில் வழங்கப்படும் சங்கீத விசாதரப் பட்டம் அல்லது தகுதித் தேர்வுப் பத்திரம்

அல்லது

(ii) அரசினர் நுண்கலைக் கல்லூரியால்/அரசினர் சங்கீதக் கல்லூரியால் ஆறு வருட பயிற்சி நெறியின் பின் வழங்கப்படும் தராதரப் பத்திரம்

அல்லது

(iii) லங்கா காந்தர்வ சபையால் வழங்கப்படும் சங்கீத இறுதித் தாராதரப் பத்திரம்/அரசினர் சங்கீதப் பரீட்சை இறுதித் தாராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) பின்வரும் வாத்தியங்களில் குறைந்தபட்சம் ஒன்றை வாசிப்பதில் மிகச் சிறந்த ஆற்றலும் ஏனைய வாத்தியங்களில் ஒன்றை அல்லது கூடியவற்றை வாசிப்பதில் ஆற்றலும் பெற்றிருக்க வேண்டும் :

சித்தார், சரோத், புல்லாங்குழல், சேனை, வயலின், எஸ் ராஜ், சரங்கி, வீணை, ஜலதரங்க, நலதரங்க, தப்ளார், பக் வாஜ், கோல், டோலக்.

(ஈ) வாத்தியச் சங்கீதம் கற்பிப்பதில் 3 வருட அனுபவம் பெற்றிருப்பதுடன் சிங்கள மொழி மூலம் கற்பிக்கக்கூடியவராயும் பதிவுச் சுவடிகளை வைத்திருக்கக்கூடியவராயும் இருக்க வேண்டும்.

குறிப்பு : 1. விண்ணப்பதாரி மிகச் சிறந்த ஆற்றல் பெற்றிருக்கும் வாத்தியத்தைவிட மேற்கூறப்பட்ட வாத்தியங்களில் பலவற்றை வாசிப்பதில் ஆற்றல் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

2. அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் மேலுள்ள 4(அ) (i) ஆம், (ii) ஆம் அல்லது (iii) ஆம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெற்றிராதிருப்பினும் கனிட்ட பாடசாலைத் தாராதரப் பத்திரமும் ஏனைய தகைமைகளும் பெற்றிருப்போரின் விண்ணப்பங்களும் சேர்த்துக்கப்படும்.

(உ) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

5. நியமன நிபந்தனைகள்

(i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். நியமதாரிகள் விதவைகள், அனுதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும்.

(ii) நியமனம் சாதாரணமாக மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும். அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவியை ஏற்கனவே வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படுமிடத்து அவர் ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

(iii) அரசாங்க கரும மொழிக் கொள்கையைக் காரியப்படுத்துதற்கு, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தற் பொருட்டு ஆக்கப்பட்டுள்ள அல்லது ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கமைய ஒழுக வேண்டும்.

6. அரசினர் சேவையிலுள்ள தகுதியுடைய உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் ஏற்றுக் கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும் விதிக்கப்பட்ட திகதிக்குமுன் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டு உரிய காரணங்காட்டி அதனை ஏற்றுக் கொள்ளுமாறு அவரால் சிபார்சு செய்யப்பட்டாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலங்களையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சாட்சிப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரமேனும் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்ட விதிகளின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பத்திரமேனும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரமும் உயர்தொழிற் தராதரப் பத்திரமும்.

(இ) விண்ணப்பதாரியின் ஒழுக்கம் பற்றிய சமீபகால மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள்.

(குறிப்பு : ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள அபேட்சகர்கள் நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை)

8. விண்ணப்பங்களும் அவை பற்றிய ஏனைய கடிதங்களும் இவ்வமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரின் பெயருக்கும் அனுப்பப்படலாகா.

9. அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையும் இவ்வர்த்தமானியில் I ஆம் பகுதி II ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

10. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் மேற்குறித்த அறிவித்தலைப் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் அதுபற்றி கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். இத்தேவைக்கிணங்க ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பவராவர்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
19.9.1970.

பி. உடகம,
நிரந்தரச் செயலாளர்,
கல்வி அமைச்சு.

மாதிரிப் படிவம்

கல்வி அமைச்சு

அரசினர் சங்கீதக் கல்லூரியில் வாத்தியச் சங்கீத உதவி விரிவுரையாளர் பதவி

1. முழுப்பெயர் :————.
(தெளிவாக எழுதவும்)

2. தபால் விலாசம் :————.

3. சாதியம் :————.

((அ) வம்சாவழியாகவா (ஆ) பதிவு காரணமாகவா இலங்கையர். பதிவு காரணமாயின் பிரசாவுரிமைப் பத்திரத்தின் திகதியையும் தொடர்பிலக்கத்தையும் குறிப்பிடவும்)

4. (அ) விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளபடி சரியான வயது : வரு.———— மா.———— நா.————.

(ஆ) பிறந்த திகதி : வரு.———— மா.———— நா.————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)

5. பின்வருவோர் பிறந்த இடம்.—

(அ) விண்ணப்பதாரி :————.

(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.

(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :————.

(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :————.

6. கல்வித் தகைமைகளும் திகதியுடன் கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையும்.—

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

(இ) ஆங்கிலம் :————.

7. கடைசியாகப் படித்த பாடசாலையிலிருந்து விலகிய திகதி : ————.

8. பாடசாலையிலிருந்து விலகிய திகதியிலிருந்து புரிந்த உத்தியோகங்களின் விபரம் :

| திணைக்களம் | வகித்த பதவி | சேவைக்காலம் இருந்து | வரை |
| --- | --- | --- | --- |
| ————. | ————. | ————. | ————. |

9. சங்கீதத்தில் பெற்றுள்ள தராதரப் பத்திரம் :————.
(அத்தகைய பத்திரங்களை வழங்கிய நிலையத்தின் பெயரைக் குறிப்பிடவும்)

10. எவ்வாத்தியத்தில் சிறந்த திறமை பெற்றுள்ளீர் ? :————.

இவ்விண்ணப்பத்தில் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இவ்விண்ணப்பத்தில் கொடுத்துள்ள விபரங்களில் யாதேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்டஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

9–1044—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

எனதெண் : பொ. நி/5/220

## கல்வி அமைச்சு

### பணி செய்துகாட்டுவோர் பதவிகள்

கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் கீழ்க்காணும் தொழில்களில் பணி செய்துகாட்டுவோர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள், கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப்படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு " நிரந்தரச் செயலாளர் " கல்வி அமைச்சு (பொது நிர்வாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்துக்கு 1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " பணி செய்துகாட்டுவோர் பதவி " எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

பணி செய்துகாட்ட வேண்டிய தொழில்கள்
மின்சாரத் தொழில்

குறிப்பு : 13.6.69 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலுக் கிணங்க இப்பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரித்துடையனவையுமாகும். விதவைகள் அனுதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். நியமனம் 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும். ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும்

உபகாரச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படுமிடத்து அவருடைய நியமனம் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு பரீட்சை நியமனமாக அமையும். தெரிவு வாய்மூலப் பரீட்சை, செயமுறைப் பரீட்சை ஆகியவை மூலம் நடைபெறும்.

3. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாக திருப்திகரமான சான்று காட்டவேண்டும் :—

(i) 1969 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயுமிருக்க வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ii) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) மேற்போந்த 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களில் ஒன்றில் அல்லது கூடியவற்றில் புறநடையான திறமைவாய்ந்தவராக இருக்க வேண்டும் (பலதொழில்களில் திறமை பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

(iv) பின்வரும் (இருவருட) தொழிற் பயிற்சி நெறிகளை சித்திகரமாக பூர்த்தி செய்ததற்கான தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்:

(அ) மருதானை இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரித் தராதரப் பத்திரம்; அல்லது

(ஆ) யாதேனும் கனிட்ட தொழில்நுட்ப நிலையத்தில் தராதரப் பத்திரம்; அல்லது

(இ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரிப் பகுதித் தராதரப் பத்திரம்; அல்லது

(ஈ) சமனான அல்லது உயர்ந்த தகைமைகள்.

(v) உரிய தொழிலில் 5 வருட செயல் முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

4. இப்பதவிக்குரிய அடிப்படை வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :

ரூபா 1,860—120 × 8—2,820

ஒன்று திரட்டிய வருடாந்தச் சம்பளத் திட்டம் :—ரூ. 4,152—8 × 144—5,304.

5. அரசினர் சேவையிலுள்ள தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி அப்பகுதித் தலைவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பெற்றுள்ள அதியுயர்ந்த கல்வித் தராதரப் பத்திரமும் உயர் தொழிற் தராதரப் பத்திரங்களும்.

(இ) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகால நற்சாட்சிப்பத்திரங்கள்.

முக்கிய குறிப்பு.—அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்கள் மேற்போந்த (இ) ம் உபபந்தியில் குறிப்பிட்டுள்ள நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சாதனங்களின் மூலப் பிரதிகள் வேண்டப்படும் நேரம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

7. விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்களேனும் இவ்வமைச்சின் நிரந்தரச் காரியதரிசியின் விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும், எக்காரணத்தையிட்டும் அவைகள் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள், கல்வி, அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

எனதெண் : பொ. நி/5/220,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
18.9.1970.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**கல்வி அமைச்சு**

**பணி செய்துகாட்டுவோர் பதவி—மின்சாரத் தொழில்**

(தொடரெண் : பொ. நி/5/220)

1. முழுப்பெயர் (தெளிவான எழுத்துக்களில்) : ————.

2. தபால் விலாசம் : ————.
(விலாசத்தில் ஏற்படும் யாதேனும் மாற்றம் உடனே அறிவிக்கப்பட வேண்டும்).

3. சாதியம் : ————.
(வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் எனக் குறிப்பிடுக. பதிவு காரணமாக நீர் இலங்கைப் பிரசையாயின் பிரசாவுரிமைப் பத்திரத்தின் தொடர்பிலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக).

4. (அ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று உள்ளபடி வயது : வரு.————. மா.————. நாள்————.
(ஆ) பிறந்த திகதி : வரு.————. மா.————. நாள்————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்).

5. பின்வருவோர் பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரி :————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :————.

6. (அ) விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? :——.
(ஆ) விவாகம் செய்தவராயின், பின்வரும் விபரங்களைக் கொடுக்க :
(i) விவாகத் திகதி :————.
(ii) பிள்ளைகளின் எண்ணிக்கை :————.

7. (அ) 15 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள், கல்லூரிகள், நிலையங்கள் :—

| பொதுக் கல்வி | | | உயர்தொழில்/தொழில்நுட்பக் கல்வி (யாதேனும் படித்திருப்பின்) | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| | | | | | |

(ஆ) கடைசிப் பாடசாலையிலிருந்து விலகிய திகதி :————.

8. கல்வித் தகைமைகளும் கடைசியாகச் சித்தி எய்திய பரீட்சையும் அதன் திகதியும் :—
(அ) சிங்களத்தில் :————.
(ஆ) ஆங்கிலத்தில் :————.
(இ) தமிழில் :————.

9. உயர்தொழில் தகைமைகளும் தொழில் நுட்பத் தகைமைகளும் அல்லது இவைகளில் யாதேனும்—(யாதேனும் பெற்றிருப்பின்) : ————.
(அ) அவைகள் பெற்ற திகதிகளும், (ஆ) படித்த நிலையங்களும் : ————.

10. வாசிப்பு, எழுத்து, சம்பாஷணை, பேச்சு மொழி பெயர்ப்பு ஆகிய வற்றில் பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள தேர்ச்சி :
(அ) சிங்களம் :——. (ஆ) தமிழ் :——. (இ) ஆங்கிலம் : ——.

11. நீர் மிக விசேட திறமை பெற்றுள்ள தொழில்கள் (அறிவித்தலின் 3 (iii) ஆம் பந்தியைப் பார்க்க) :————.

12. விசேட தகைமைகள் (அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள விசேட தகைமைகளை/அனுபவத்தை அல்லது இவ்விரண்டினையும் பெற்றி ருக்கிறீரா ? அங்ஙனமாயின், அவை பற்றிய விபரங்களையும் அவை பெற்றுக் கொள்ளப்பட்ட திகதிகளையும் குறிப்பிடுக) :————.

13. சட்ட முறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி, (ஆ) வழக்கு எண், (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

14. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எவ் வளவுக்கு ? :————.

15. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் (அத்தகைய பத்திரங்களின் பிரதிகள்—மூலப் படிகள் அல்ல இணைத்தனுப்பப்பட வேண்டும். ஏற்கனவே அர சினர் சேவையிலிருப்பவர்கள் இவ்விபரங்களைக் கொடுக்கவேண்டிய தில்லை) :————.

16. முன்னர் யாதேனும் படையில் சேவை புரிந்து விலகியவராயின் :—
(அ) படைக் கூற்றின் பெயர் :————.
(ஆ) வகித்த பதவி :————.
(இ) சேர்ந்த, விலக்கப்பட்ட திகதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக ————.

17. (அ) பாடசாலையிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தி யோகம் :—
(i) வகித்த பதவிகள் :————.
(ii) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.
(iii) விலகியதற்கான காரணம் :————.
(ஆ) அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு ஸ்தல ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்தி லேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்த கைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் :————.

18. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள் (நிலையம்/பகுதி) :——.
(i) பதவிப் பெயரும் பதவியின் தரமும் :————.
(ii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா/தற்காலிகமானதா/ சமயோசிதமா ? :————.
(iii) தற்போதைய (சகாயப் படிகள் உட்படாத) சம்பளமும் சம்பள விகிதமும் :————.
(iv) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக் கிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படு தற்கு முன்னராயின், தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரரா வேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

இடம் :————.
திகதி :————.

9–1013—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

## கல்விப் பகுதி

### புற போதனாசிரியர் பதவிகள், கனிட்ட தொழில்நுட்ப நிலையம், கேகாலை, 1970/71

கேகாலை கனிட்ட தொழில்நுட்ப நிலையத்திலுள்ள புற போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் (கீழ்க்காணும் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு) அதிபர், கனிட்ட தொழில் நுட்ப நிலையம், கேகாலை என்ற விலாசத்துக்கு 5.10.70 நண்பகல் 12 மணிக்கு அல்லது முன்னதாகக் கிடைக்கக்கூடிய தாக அனுப்பப்பட வேண்டும்.

பின்வரும் பாடங்களிலே வெற்றிடங்கள் உண்டு :—

1. சிங்கள மொழி
2. வணிக எண்கணிதம்
3. வணிகப் புவியியல்
4. கணக்குப் பதிவியல்
5. வணிகமும் நிதியியலும்
6. ஆங்கில மொழி

} சிங்கள மொழி மூலம்

2. புற போதனாசிரியர்களுக்குக் கொடுபடக்கூடிய கட்டணம் அவர் களுடைய கல்வித் தகைமைகள், அனுபவம், அவர்கள் படிப்பிக்க வேண்டப்படும் வகுப்புகள் ஆகியவற்றிற்கமைய மணித்தியாலம் ரூ. 5.00 தொடக்கம் ரூ. 10.00 வரை மாறுபடும்.

3. நியமனம் இவ்வருடம் ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகி அடுத்த வருடம் ஓகஸ்ற் மாதம் முடிவடையும் காலத்துக்கானதாகும். அவசிய மெனின் ஒருவரின் சேவை முன்னதாகவே நிறுத்தப்படலாம்.

4. 1 தொடக்கம் 5 வரையுள்ள பாடங்களிலான வகுப்புகள் பி.ப. 5.00 மணி தொடக்கம் பி. ப. 7.15 மணி வரையும், 6 ஆம் இலக்கமிடப் பட்ட பாடத்துக்கான வகுப்புகள் மு. ப. 8.30 மணி தொடக்கம் பி.ப. 4.30 மணி வரையும் நடைபெறும். விதிக்கப்பட்டுள்ள நேரங்களின்போது படிப் பிக்கக்கூடிய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே சீர்தூக்கப்படும்.

5. உள்ளக பரீட்சகர்கள் அல்லாத வேறு பரீட்சகர்கள் அமர்த்தப்பட்டா லன்றி, புற போதனாசிரியர்கள் தமது வகுப்புகளிலுள்ள மாணவர்களை வருடாந்த இடைமாணிப் பரீட்சைகளிலும் இறுதிப் பரீட்சைகளிலும் மேலதிக வேதனமின்றி பரீட்சிக்க வேண்டும்.

6. அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப் பட்டுள்ள திகதிக்கு முன் கேகாலை, கனிட்ட தொழில்நுட்ப நிலைய அதிப ரால் பெற்றுக் கொள்ளப்படாத விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதிக்கு முன் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டு தாமதத்துக்கு போதிய காரணம் காட்டி அனுப்பப்பட்டாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. எப்பாடத்துக்கு விண்ணப்பிக்கப்படுகிறதென விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் மிக முக்கியம் எனவும் விண்ணப்பங்கள் கேகாலை கனிட்ட தொழில்நுட்ப நிலையத்தில் வேலை செய்யும் எவ்வுத்தியோகத்தரின் சொந்த விலாசத்துக்கும் அனுப்பப்படலாகாதெனவும் கவனிக்கவும்.

ஏ. ஜே. எஸ். குணவர்தன,
பிரதேச கல்விப் பணிப்பாளர்.
கேகாலை.

கல்விப் பகுதி, கேகாலை,
1970 ம் ஆண்டு செப்டம்பர் மீ 16 ந உ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

#### புற போதனாசிரியர் பதவி, கனிட்ட தொழில்நுட்ப நிலையம், கேகாலை—1970/71 ஆம் ஆண்டு

1. பெயர் : ————.
2. விலாசம் : (அ) சொந்த :————.
(ஆ) அலுவலக : ————.
3. வயது : ————.
4. தொழில் : ————.
5. மாதாந்த சம்பளமும் சம்பள அளவுத் திட்டமும் : ————.
(அ) முன்னைய அளவுத் திட்டம் : ————.
(ஆ) ஒன்றுதிரட்டிய அளவுத் திட்டம் : ————.
6. கல்வித் தகைமைகள் : ————.
7. உயர்தொழில் தகைமைகள் : ————.
8. கற்பித்தல் அனுபவம் : ————.
9. விண்ணப்பிக்கப்படும் பாடங்கள் : ————.

| பாடம் | போதனமொழி |
|---|---|
| ..................... | ..................... |
| ..................... | ..................... |

10. வாராந்தம் படிப்பிக்கக்கூடிய ஆகக்கூடுதலான வகுப்புகளின் எண்ணிக்கை :————.

மேற்குறித்த விபரங்கள் சரியானவையென நான் அத்தாட்சிப்படுத்து கிறேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

9–951—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

## கல்வி அமைச்சு

### அரசினர் வித்தியாலங்களிலுள்ள I ஆந் தர, II ஆந் தர தலைமை ஆசிரியர்/சிரேட்ட உதவி ஆசிரியர் பதவிகள்

சிங்கள, தமிழ், முஸ்லிம் வித்தியாலங்களிலுள்ள I ஆந் தர, II ஆந் தர தலைமை ஆசிரியர்/சிரேட்ட உதவி ஆசிரியர் பதவிகளுக்கு அரசினர் சேவையிலுள்ள ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆந் திகதிய 14,847 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியான அறிவித்தலுக்கிணங்க விண்ணப்பித்தவர்கள் இப்பதவிகளுக்கு நியமனங் கோருவதாயின் இவ்வறிவித்தலுக்கிணங்கத் திரும்ப விண்ணப்பிக்க வேண்டும். கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறைக்கமையத் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள், விண்ணப்பதாரி சேவை புரியும் கல்வி மாவட்டத்துக்குப் பொறுப்பாகவுள்ள பிரதேச வித்தியாதிபதிக்கு 1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படவேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “ தலைமை ஆசிரியர் பதவி—I ஆந்/ II ஆந் தரம் (சிங்களம்/தமிழ்/முஸ்லிம்) எனத் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும். (பொருத்த மற்றவற்றைக் கீறிவிடுக.) கல்வி மாவட்டங்களுக்குப் பொறுப்பாகவுள்ள பிரதேச வித்தியாதிபதிகளின் விலாசங்கள் கீழே கொடுபட்டுள்ளன :—

| கல்வி மாவட்டம் | கல்வி மாவட்டத்துக்குப் பொறுப்பாகவுள்ள பிரதேச வித்தியாதிபதியின் விலாசம் |
|---|---|
| அநுராதபுரம், பொலன்னறுவை | பிரதேச வித்தியாதிபதி, கல்வித் திணைக்களம், அநுராதபுரம் |
| பண்டாரவளை, மொனராகலை | பிரதேச வித்தியாதிபதி, கல்வித் திணைக்களம், பண்டாரவளை |
| மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை, திருகோணமலை | பிரதேச வித்தியாதிபதி, கல்வித் திணைக்களம், மட்டக்களப்பு |
| சிலாபம் | பிரதேச வித்தியாதிபதி, கல்வித் திணைக்களம், சிலாபம் |
| கொழும்பு தெற்கு, ஹோமகம | பிரதேச வித்தியாதிபதி, கல்வித் திணைக்களம், கிறீன் பாத், கொழும்பு 7 |
| கொழும்பு வடக்கு .. | பிரதேச வித்தியாதிபதி, கல்வித் திணைக்களம், கம்பஹா |
| காலி .. | பிரதேச வித்தியாதிபதி, கல்வித் திணைக்களம், காலி |
| யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா | பிரதேச வித்தியாதிபதி, கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம் |
| களுத்துறை .. | பிரதேச வித்தியாதிபதி, கல்வித் திணைக்களம், களுத்துறை |
| கண்டி, மாத்தளை | பிரதேச வித்தியாதிபதி, கல்வித் திணைக்களம், கண்டி |
| கேகாலை .. | பிரதேச வித்தியாதிபதி, கல்வித் திணைக்களம், கேகாலை |
| குருணாகல் .. | பிரதேச வித்தியாதிபதி, கல்வித் திணைக்களம், குருணாகல் |
| மாத்தறை, தங்காலை | பிரதேச வித்தியாதிபதி, கல்வித் திணைக்களம், மாத்தறை |
| நுவரேலியா .. | பிரதேச வித்தியாதிபதி, கல்வித் திணைக்களம், நுவரேலியா |
| இரத்தினபுரி .. | பிரதேச வித்தியாதிபதி, கல்வித் திணைக்களம், இரத்தினபுரி |

2. வயதெல்லை,—

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 30 வயதுக்குக் குறைந்தவராய் இருக்கலாகாது.

3. நியமன நியதிகள்,—

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரித்துடையனவையுமாகும்.

(ii) தெரிவு செய்யப்படுபவர்கள் புதிய பதவியில் ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை புரியவேண்டும். அப்பதவியில் அவர் உறுதிப்படுத்தப்பட்டதும், அத்தரத்துக்குப் பதவி உயர்ச்சி அளிக்கப்பட்ட திகதி தொடக்கம் நிதிப் பிரமாணங்களுக்கமைய சரியான சம்பள விகிதத்தில் அமர்த்தப்படுவார்.

(iii) தெரிவு செய்யப்படுவோர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை செயற்படுத்துதற்கு, குறிப்பாக, 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரச கரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையில் கொண்டுவருதற்கு, ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடியனவான விதிகளுக்கமைய ஒழுக வேண்டும்.

(iv) தெரிவு செய்யப்படுபவர்கள் தீவின் எப்பகுதியிலேனும் கடமை புரிய வேண்டும்.

4. சம்பளமும் சகாயப்படிகளும்,—

(அ) இப்பதவிகளுக்கான சம்பள விகிதங்கள் பின்வருமாறு :—

(i) தலைமை ஆசிரியர் I ஆந் தரம்.—பயிற்றப்பட்ட I ஆம் வகுப்புத் தராதரப் பத்திரம் பெற்றவர்களுக்கு—
ரூ. 3,990—5 × 90—11 × 144—ரூ. 6,024 வருடாந்தம் (மூன்று திரட்டிய சம்பளம்)
(ரூ. 1,776—7 × 72—9 × 120—ரூ. 3,360 வருடாந்தம்—அனுமானச் சம்பளம்)
I ஆந் தர ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றவர்களுக்கு—ரூ. 3,990—11 × 90—ரூ. 4,980 வருடாந்தம் (மூன்று திரட்டிய சம்பளம்)
(ரூ. 1,728—11 × 72—ரூ. 2,520 வருடாந்தம்—அனுமானச் சம்பளம்)

(ii) தலைமை ஆசிரியர் II ஆந் தரம்/சிரேட்ட உதவி ஆசிரியர்,—பயிற்றப்பட்ட I ஆம் வகுப்புத் தராதரப் பத்திரம் பெற்றவர்களுக்கு—
ரூ. 3,720—8 × 90—9 × 144—ரூ. 5,736 வருடாந்தம் (மூன்று திரட்டிய சம்பளம்)
(ரூ. 1,524—8 × 72—9 × 120—ரூ. 3,180 வருடாந்தம்—அனுமானச் சம்பளம்)
I ஆந் தர ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றவர்களுக்கு ரூ. 3,630—11 × 90—ரூ. 4,620 வருடாந்தம் (மூன்று திரட்டிய சம்பளம்)
(ரூ. 1,488—11 × 72—ரூ. 2,280 வருடாந்தம்—அனுமானச் சம்பளம்)

(ஆ) விவாகச் சகாயப்படி விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கமைய வழங்கப்படும்.

5. கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்,—

(அ) I ஆந் தரத் தலைமை ஆசிரியர் பதவிகளுக்கு—

(i) குறைந்தபட்சம் II ஆந் தரத் தலைமையாசிரியராக ஒரு வருட சேவை புரிந்த பயிற்றப்பட்ட I ஆந் தர ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றவராய் இருக்கவேண்டும்.

அல்லது

(ii) குறைந்தபட்சம் II ஆந் தரத் தலைமையாசிரியராக ஒரு வருட சேவை புரிந்த I ஆந் தர ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றவராய் இருக்க வேண்டும்.

அல்லது

(iii) I ம் வகுப்புப் பெற்றபின்னர் குறைந்தபட்சம் 4 வருட சேவை புரிந்த I ஆம் வகுப்பு பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றவராய் இருக்க வேண்டும்.

அல்லது

(iv) I ம் வகுப்புப் பெற்றபின்னர் குறைந்தபட்சம் 5 வருட சேவை புரிந்த I ஆம் வகுப்பு ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றவராய் இருக்க வேண்டும்.

(ஆ) II ஆந் தரத் தலைமை ஆசிரியர்/சிரேட்ட உதவி ஆசிரியர் பதவிகளுக்கு—

(i) I ம் வகுப்புப் பெற்றபின்னர் குறைந்தபட்சம் 2 வருடங்கள் சேவை புரிந்த பயிற்றப்பட்ட I ஆம் வகுப்புத் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியராக இருக்க வேண்டும்.

அல்லது

(ii) I ம் வகுப்புப் பெற்றபின் குறைந்தபட்சம் 3 வருடங்கள் சேவை புரிந்த I ம் வகுப்பு ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியராக இருக்க வேண்டும்.

(இ) விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் உடல்நலம் உடையவராயும் சிறந்த நல்லொழுக்கம் உடையவராயும் இருக்க வேண்டும்.

குறிப்பு 1.—மேலே குறிக்கப்பட்டுள்ள தகைமைகள் ஆகக்குறைந்த தேவைகளாகும். கைப்பித்தல் தொழிலுக்கு தொடர்புடையனவான கல்வித் தொழிற் தகைமைகளை பெற்றுள்ளவர்களுக்கும் பாடசாலைகளில் நடைபெறும் வெளி முயற்சிகளில் ஆர்வம் காட்டியுள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு 2.—தலைமை ஆசிரியராக அல்லது ஆசிரியராகப் புரிந்த சேவைக் காலத்தைக் கணித்தற்பொருட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட படிப்பு லீவு அல்லது சம்பளமற்ற லீவு சேர்க்கப்படமாட்டாது.

6. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்கள் எவற்றையேனும் அல்லது எல்லாவற்றையேனும், வேண்டப்படும் நேரத்தில் சமர்ப்பிக்க வேண்டும் :

(அ) பிறப்புப் பதிவுச் சாட்சிப் பத்திரம் (மு. கு. : ஞானஸ்நானப் பத்திரங்கள் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் கைநூல் பிரமாணங்களின் நோக்கத்தின் பொருட்டு வழங்கப்படும் பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது).

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தகைமைப் பத்திரம் ;

(இ) உயர்தொழிற் தகைமைத் தராதரப் பத்திரம் ;

(ஈ) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழியில் சித்தி எய்திய அதியுயர்ந்த பரீட்சைத் தராதரப் பத்திரம்.

குறிப்பு 1.—சாதனங்களேனும் சாதனங்களின் பிரதிகளேனும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தனுப்பப்படலாகா.

குறிப்பு 2—வேண்டப்படும் நேரத்தில் குறித்த சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் உரிமை சீர்தூக்கப்படமாட்டாது.

7. விண்ணப்பங்களும் அவை தொடர்பான எவ்வித கடிதங்களும் உரிய பிரதேச வித்தியாதிபதிக்கு அனுப்பப்பட வேண்டுமேயொழிய இவ்வமைச்சிலேனும் கல்வித் திணைக்களங்களிலேனும் உள்ள எவ்வுத்தியோகத்தரின் சொந்த விலாசத்துக்கல்ல.

8. இரு பதவிகளுக்கும் விண்ணப்பிக்க விரும்புபவர் ஒவ்வொரு பதவிக்கும் புறம்பான விண்ணப்பம் அனுப்ப வேண்டும்.

9. இவ்வர்த்தமானியின் I ம் பகுதி II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமையும் பொது நிபந்தனைகளுக்கும் கவனம் கோரப்படுகின்றன.

10. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியின் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

பி. உடகம,
நிரந்தரச் செயலாளரும் மகா
வித்தியாதிபதியும்.

பா. ப./8/494,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1970 ம் ஆண்டு செப்டம்பர் மீ 18 ந் வ.

## (மாதிரி விண்ணப்பப் படிவம்)

***சிங்கள/*தமிழ்/*முஸ்லிம் வித்தியாலங்களிலுள்ள *I ஆந் தர/*II ஆந் தர தலைமை ஆசிரியர்/சிரேட்ட உதவி ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம்**

(*பொருத்தமற்ற சொற்களைக் கீறிவிடுக)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :————.
   (ii) முழுப்பெயர் :————.
2. விலாசம் : ————.
3. பால் : ————.
4. விவாகஞ் செய்தவரா, செய்யாதவரா ?:————.
5. தற்போதைய பாடசாலையின் பெயரும் விலாசமும் :————.
6. ஆசிரியராகப் பதிவிலக்கம் :————.
7. பிறந்த திகதி : ————.
8. சாதியம் : ————.
9. வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா நீர் இலங்கைப் பிரசை :————.
10. சமயம் : ————.
11. கல்வித் தகைமைகள் : ————.
12. உயர்தொழில் தகைமைகள் :————.
    (அ) பயிற்றப்பட்ட ஆசிரியராயின்,—
        (i) ஆசிரியர் கலாசாலை : ————.
        (ii) பயிற்சிக் காலம் :————.
        (iii) தராதரப் பத்திரத்தின் இலக்கம் அது காரியப்படும் திகதியும் : ————.
        (vi) I ம் வகுப்புக்கு உயர்த்தப்பட்ட திகதி :————.
    (ஆ) ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றவராயின்,—
        (i) தராதரப் பத்திரத்தின் இலக்கமும் அது காரியப்படும் திகதியும் :————.
        (ii) II ம் வகுப்புக்கு உயர்த்தப்பட்ட திகதி :————.
        (iii) I ம் வகுப்புக்கு உயர்த்தப்பட்ட திகதி :————.
    (இ) II ஆந் தரத் தலைமை ஆசிரியராயின்/சிரேஷ்ட உதவி ஆசிரியராயின், அத்தரத்திற்கு நியமனம் பெற்ற திகதி:————.
13. ஏனைய தகைமைகள் ; ஏதும் இருப்பின் :————.
14. கடந்த 5 வருடகாலங்களில் தொழிற் தராதரப் பத்திரத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட புறக்குறிப்புகள் :————.
15. சிங்களத்தில்/தமிழில் பெற்றுள்ள அறிவு :————.
16. சேவை விபரம் :— .
    பாடசாலைப் பெயர் தொடக்கம் வரை வகித்த பதவி
    .........................................................................................
17. (i) படிப்பு லீவு சம்பந்தமான விபரங்கள் (காலங்கள் உட்பட) ————.
    (ii) கடந்த 12 வருட காலங்களுள் எடுத்த சம்பளமற்ற லீவு (எடுத்திருப்பின்) பற்றிய விபரங்கள் :————.
18. (i) வித்தியாதிபதியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பாராட்டுக் குறிப்புகள் பற்றிய விபரங்கள் :————.
    (ii) அரசினரின் கீழ் சேவை செய்யும் காலத்தில் தண்டனை யாதேனும் பெற்றிருப்பின் அது பற்றிய விபரங்கள் :——
19. வேறு யாதேனும் விசேட உரிமைகள் :————.
20. அரசினர் வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் பந்தியில் கொடுபட்டுள்ள கல்வித் தகைமைகளுள் எதற்கமைய நீர் விண்ணப்பித்தற்குத் தகுதி பெறுகிறீர் :———— .

மேலே நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் செம்மையானவையெனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இவ்விபரங்களில் எவையேனும் உண்மையற்றவையென அல்லது பிழையானவையென நான் தெரிவு செய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதியற்ற வராகக்கப்படுவேன் எனவும் தெரிவு செய்யப்பட்டபின் காணப்படின நஷ்டஈடின்றி சேவையிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

9-1016—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

---

## இலங்கை அரச கடற்படை

**புனைகையர் தவிர்ந்த துறைகளுக்கு மாலுமிகளைச் சேர்த்தல்**

இலங்கை அரச கடற்படையின் நிலையான கடற்படையில் புனைகையர் தவிர்ந்த துறைகளுக்கு கடலோடிப் பொறிக்கம்மியர்கள், செய்தி அறிவிப்பாளர்கள், எழுத்தர்கள், களஞ்சிய உதவியாளர்கள், வைத்திய படுக்கைப் பணியாளர்கள் ஆக மாலுமிகளைச் சேர்ப்பதற்கு வெற்றிடங்கள் உள.

2. கீழ்க்காணும் நிபந்தனைகட்கு அமைந்த தராதரம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

3. பொது நிபந்தனைகள்—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் :—
   (அ) இலங்கையராக இருத்தல் வேண்டும் ;
   (ஆ) சிங்களம்/தமிழ் அல்லது ஆங்கிலம் இவற்றுள் ஏதாவதொரு மொழியில் ஏழாம் வகுப்பு (7 ஆம் வகுப்பு) சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;
   (இ) நற்பண்புள்ளவர்களாக இருத்தல் வேண்டும் ;
   (ஈ) கீழ்காணும் குறைந்த பட்ச உடல் அமைப்புக் கொண்டிருத்தல்வேண்டும் ;
       (i) 5 அடி 4 அங்குலத்திற்குக் குறையாத உயரம் ;
       (ii) 105 இறாத்தலுக்குக் குறையாத நிறை ;
       (iii) 32 அங்குலத்திற்குக் குறையாத மார்பு அளவு ;

(உ) வயது எல்லை : 1971 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி பதினெட்டு வயதிற்குக் குறையாதவராயும் இருபது வயதிற்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும் ;

(ஊ) கடற்படைத் தளபதியினால் விதிக்கப்பட்ட வைத்தியப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

குறிப்பு :—இலங்கைக் கல்விப் பொதுத் தராதர (சாதாரண) ப் பரீட்சையில் ஆகக் குறைந்தது 4 பாடங்கள் ஒரே தடவையில் சிங்களம்/தமிழ் அத்துடன் கணிதம்/தூய கணிதம் உட்பட சித்தியடைந்த விண்ணப்பதாரர்களுக்கு புனைகையர் தவிர்ந்த வேறு துறைகளில் சேர்த்துக்கொள்ளப் படுவதற்கு விசேட சலுகை அளிக்கப்படும்.

4. **ஆள் திரட்டும் முறை** : தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் பொதுப் பிரவேச அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர். அத்துடன் தொடக்கப் பயிற்சி ஒன்றின் காலவெல்லைக்குப் பின்பு கடற்படையின் வேறுபட்ட கிளைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். எந்தக் காரணத்தைக் கொண்டும் தகுதியற்றவர்களாகக் காணப்படுபவர் நிலையான கடற்படையிலிருந்து நீக்கப்படலாம்.

5. **சேவை நிபந்தனைகள்** : சேவை நிபந்தனைகள் 1950 ஆம் ஆண்டு டிசெம்பர் 9 இன் 10,187 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுக் காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட 1950 ஆம் வருட கடற்படைத் திரட்டுச் சேவைப் பிரமாணங்களுக்கு அமைந்தவையாக இருக்கும்.

6. **சேவைக்காலம்** : தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் கடலோடிகளைச் சேர்த்தல் ஏற்பாடுகளுக்கு அமைந்தவாறும், சேர்தல் திகதியிலிருந்து, 1950 ஆம் ஆண்டு கடற்படைச் சேவைப் பிரமாணங்களுக்கு அமைந்தவாறும், மேற்கூறப்பட்டுள்ள பிரமாணங்களை அதன்பின்னர் காலத்திற்குக் காலம் திருத்தப்படுவனவற்றிற்கும் அமையுமாறும் இலங்கை அரச கடற்படையின் நிலையான கடற்படையில் நியமிக்கப்படுவார்கள். நிலையான கடற்படையில் கடலோடி ஒருவரின் மூலமான ஆட்சேர்த்தல் காலமானது கடலோடிகளைச் சேர்த்தற் சூழ்நிலைக்குத் தகுந்தவாறும் 1950 ஆம் ஆண்டுச் சேவைப் பிரமாணங்களின்படியும் அதாவது தற்பொழுது பன்னிரண்டு (12 வருடங்கள்) வருடங்கள் ஆகும். மேற்கூறப்பட்ட பிரமாணங்களைச் சேர்த்தலின்படி புனைகையர் தவிர்ந்த துறைகளுக்குக் கடலோடி ஒருவரை சேர்க்கப்படும் மூலமான ஆட்திரட்டல் காலமானது 5 வருடங்களாக இருக்குமென கூறப்படுவதோடு, 5 வருட கால முடிவிற்கு முன்னர் மேலே கூறப்பட்ட அவ்வகைக் கடலோடி நிலையான கடற்படையிலிருந்து நிறுத்தப் படுவாரானுல் கடற்படைத் தளபதியின் கருத்திற்கமையத் தேவையானுல் அவருடைய சேவையை ஏழு வருடத்திற்கு அதிகரிக்காத காலத்திற்கு நீடிக்கக் கூடும். மேலே கூறப்பட்டுள்ள பிரமாணங்களுக்கமைய புனைகையர் தவிர்ந்த துறைகளுக்கு அத்தகைய கடலோடி ஒருவர் சேர்த்துக் கொள்ளப் படுவதோடு, மேலே காட்டப்பட்டவாறு, ஏழு வருடகால முடிவிற்கு முன்னர், நிலையான கடற்படையிலிருந்து விலக நேருமாயின் இருபது வருடங்களுக்கு அதிகரிக்காத காலத்திற்கு ஒரு தடவையோ அல்லது பல தடவையோ கடற்படைத் தளபதியின் கருத்திற்கமையத் தேவையானுல் திருப்பிச் சேர்த்துக் கொள்ளலாம்.

7. **சம்பளமும் செலவுப்படிகளும்** : நிரந்தரக் கடற்படைச் சேவையின் புனைகையர் தவிர்ந்த துறையில் உள்ள மாலுமிகளுக்கு 1970 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாத படைகளின் சம்பள நிர்ணய குழுவின் அறிக்கையின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும். அவ்விபரங்கள் பின்வருமாறு :—

(அ) **சம்பள விகிதம்**—மாலுமிகள் இதன்கீழ் குறிப்பிட்ட பிரகாரம் அவரவர்க்குரித்தான விதப்படி சம்பளம் பெறுவர்.

| | | சிறப்புத் தேர்ச்சியுடைய மாலுமிகள் ஆண்டுக்கு<br>ரூபா | | சிறப்புத் தேர்ச்சியற்ற மாலுமிகள் ஆண்டுக்கு<br>ரூபா |
|---|---|---|---|---|
| (i) | சாதாரண மாலுமி அல்லது அவருக்கு ஒப்பானவர் (சேவை தொடங்கும்போது) | — | .. | 2,700 |
| (ii) | சாதாரண மாலுமி அல்லது அவருக்கு ஒப்பானவர் (மூலாதாரப்பயிற்சி பெற்ற பின்னர்) .. .. .. .. | — | .. | 2,880—15 × 60—3,780 |
| (iii) | வல்ல மாலுமி அல்லது அவருக்கு ஒப்பானவர் .. .. | 3,120—15 × 60—4,020 | .. | 3,060—15 × 60—3,960 |
| (iv) | திறமை மாலுமி அல்லது அவருக்கு ஒப்பானவர் .. .. | 3,720—15 × 72—4,800 | .. | 3,660—15 × 72—4,740 |
| (v) | சிற்றுத்தியோகத்தர் அல்லது அவருக்கு ஒப்பானவர் .. .. | 4,800—10 × 90—5,700 | .. | 4,620—10 × 90—5,520 |
| (vi) | திறமைச்சிற்றுத்தியோகத்தர் அல்லது அவருக்கு ஒப்பானவர் .. | 5,250—10 × 90—6,150 | .. | 5,010—10 × 90—5,910 |

குறிப்பு :—சிறப்புத் தேர்ச்சியுடைய மாலுமிகள் என்பது பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளரின் உடன்பாட்டுடன் கடற்படைத் தளபதி தீர்மானிக்கின்றபடியான தகைமைகள் உடைய ஒருவர் எனப்பொருள்படுகின்றது.

(ஆ) சலவைப்படி— (i) கடற்படை விடுதியில் வசிக்கும் மாலுமியின் படை உடைகள், கடற்படைச் செலவில் சலவை செய்யப்படும்.

(ii) கடற்படை விடுதியில் வாசம் செய்யாத மாலுமிக்கு கடற்படைத் தளபதியால் விதிக்கப்படுகின்ற சலவைப்படி வழங்கப் படும்.

(இ) நன்னடைப்பட்டிப்படி—நன்னடைப்பட்டி வைத்திருக்கும் ஒவ்வொரு மாலுமிக்கும் கீழே குறிப்பிட்ட அவரவர்க்கு உரித்தான விதப்படி நன்னடைப்பட்டிப்படி வழங்கப்படும்.

| | | | | | ஒரு நாளைக்கு<br>ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| (i) | ஒரு நன்னடைப்பட்டிக்கு 4 வருட சேவைக் காலத் தகைமை பெறுடையவர்களுக்கு | .. | .. | .. | 00 25 |
| (ii) | இரண்டு நன்னடைப்பட்டிக்கு 8 வருட சேவைக்காலத் தகைமை பெறுடையவர்களுக்கு | .. | .. | .. | 00 50 |
| (iii) | மூன்று நன்னடைப்பட்டிக்கு 12 வருட சேவைக் காலத் தகைமை பெறுடையவர்களுக்கு | .. | .. | .. | 00 75 |

8. விண்ணப்பங்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல்வேண்டும் :—

(அ) விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் இவ்விளம்பரத்தின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தைப் போல் தங்கள் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைத் தயார் செய்து அனுப்பவேண்டும். தட்டெழுத்தில் தயாரித்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(ஆ) 1970 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 1 ஆம் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக இவ்வலுவலகத்தில் சேரும்படியாக " இலங்கை அரச கடற்படைத் தளபதி, கடற்படைத் தலைமை அலுவலகம், தபால் பெட்டி இல. 593, கொழும்பு 1 " என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடது மேற்புறத்தில் " ஆட்சேர்ப்பு மாலுமிகள் " என்று எழுதப்படல் வேண்டும்.

(இ) அரசாங்க சேவையிலிருக்கும் தகைமையுள்ள உத்தியோகத்தரது, விண்ணப்பங்கள் அன்னவரின் திணைக்களத் தலைவருக்கூடாக அனுப்பப்படல் வேண்டும். இவ்விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர்கள் அனுப்பும்போது, குறித்த விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்படுமிடத்து, விடுவிக்கப்படுவாரெனக் கூறும் திணைக்களத் தலைவரின் கடிதமொன்றுடன் விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

(ஈ) கீழ்காணப்படும் சான்றிதழ்களின் பிரதிகள் மட்டுமே விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும் :—

(i) பிறப்புச் சான்றிதழ் அல்லது ஒருவரின் பிறப்புப் பதிவு செய்யப்படாத விடத்து, பிரதம பதிவு அதிகாரியால் கொடுக்கப்பட்ட விசேட வயதுச் சான்றிதழ்.

குறிப்பு :—ஞானஸ்நான சான்றிதழ்களோ அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கிணங்க வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழோ அல்லது பிறப்புக் குறிப்போ எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(ii) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்.

(iii) அண்மையில் பெற்றுக் கொண்ட நான்கு நற்சான்றிதழ்கள். இவை விண்ணப்பகாரரின் நடத்தை, தகுதி ஆதியன பற்றியவையாக இருக்க வேண்டும். இவைகளுள் ஒன்று அவரது பகுதியின் கிராம சேவையாளரிடமிருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும். விண்ணப்பகாரர் ஏற்கனவே தொழிலில் இருப்பவரானால் இச்சான்றிதழ்களில் ஒன்று அன்னவரின் தொழிலக மேலதிகாரியிடமிருந்து பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.

(iv) விண்ணப்பகாரரின் கடைசிப் பிறந்த தினத்தன்று அல்லது அதற்குப் பின்னர் எடுக்கப்பட்ட புகைப்படப் பிரதி ஒன்று சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

குறிப்பு :—விண்ணப்பகாரரின் பெயர், இன்னாரின் விண்ணப்பப் பத்திரத்திலும், பிறப்புச் சான்றிதழிலும், தராதரப் பத்திரத்திலும் ஒன்றாக இருக்க வேண்டும்.

9. அரசாங்க மொழி : நிரந்தரக் கடற்படைச் சேவைக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர்கள் ஏற்கனவே இயற்றப்பட்டுள்ள விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை அமுல் நடத்துவதற்கும், அதிலும் விசேடமாக, 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையில் கொண்டு வருவதற்கு இனிச் செய்யக் கூடிய விதிகளுக்கும் இசைய நடத்தல் வேண்டும்.

10. பழைய சேவைக் காலத்தையுடைய படையினர் சலுகை பெற விரும்பின் அத்தகையவர்கள் மேற்குறிப்பிட்ட பொது நிபந்தனைகளுடன் :
(i) பிரித்தானிய சாம்ராச்சியப் படையில் அல்லது இலங்கைப் பாதுகாப்புப் படையில் குறைந்தது ஒரு வருடமாவது சேவை செய்தமைக்கும்.
(ii) இராணுவத்திலிருந்து விலகிய பொழுது ஆகக் குறைந்தது " மிகவும் நல்ல " நடத்தையுள்ளவரென தாம் குறிக்கப்பட்டிருப்பதற்கும்.
(iii) மேற்படிப் படைகளில் சேவை செய்த காலம் சரியான வருடங்கள், மாதங்கள், நாட்கள் எத்தனை என்பதைக் குறிப்பிடும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும்.

11. சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் கொண்டுவருதல் வேண்டும். சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டு அவைகள் காணமற் போனால் இவ்வலுவலகம் அதற்குப் பொறுப்பாகாது.

12. தபாலில் தவறும் அல்லது தாமதமாகும் விண்ணப்பங்களுக்குரிய குற்றச்சாட்டுகள் கவனிக்கப்படமாட்டா. கடைசி நாள் வரை தாமதப்படுத்தப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் உரிய காலத்தில் இவ்வலுவலகத்தில் கொடுக்கப்படாவிடில் அப்பொறுப்பு விண்ணப்பக்காரரையே சாரும்.

13. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்படும்.

14. ஏற்கனவே தொழிலில் இருப்பவர்கள் அன்னவரின் தொழிலக அதிகாரிகளுக்கூடாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் உரிய காலத்தில் இவ்வலுவலகத்திற்கு கொடுக்கப்படாவிட்டால், அவைகளை குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாகத் தங்கள் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டதென்றும், அத்துடன் தாமதத்திற்குரிய காரணத்தையும் பகுதித் தலைவர்கள் அறிவிக்க வேண்டும். இல்லையேல் அவ்விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

15. தகுதியெனக் கருதப்படும் விண்ணப்பகாரர்கள் ஒன்று அல்லது மேலதிக நேர்முகப் பரீட்சைக்கு, அங்ஙனம் குறிக்கப்பட்ட திகதியிலும் நேரத்திலும் தெரிவுச் சபையின் முன் தோற்ற வேண்டும். விண்ணப்பகாரர் கடற்படையில் சேரத் தகுதியுடையவர் என்று தெரிவுச் சபையாரால் கருதப்படின், அத்தகையோர் நியமனம் பெறுவதற்கு முன் ஒன்று அல்லது மேலதிக வைத்தியப் பரிசோதனைகளுக்குக் கொழும்புக்கு வரவேண்டும். நேர்முகப் பரீட்சைகளுக்கு அல்லது வைத்தியப் பரிசோதனைகளுக்கு தோற்றுவோர்களுக்கு பிரயாணச் செலவோ அல்லது வேறெந்தச் செலவோ கொடுக்கப்படமாட்டா.

16. விண்ணப்பகாரர்களின் பெற்றோர்களோ, நீதியான பாதுகாவலர்களோ தங்கள் சம்மதத்தை ஏற்கனவே எழுத்து மூலம் தெரிவித்தாலன்றி மாலுமிகளாகச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். அப்பேற்பட்ட சம்மதக் கடிதம் அப்பகுதிக் கிராம சேவையாளரால் அத்தாட்சிப் படுத்தப் பெற்றதாக இருத்தல் வேண்டும்.

17. ஒரு விண்ணப்பகாரரை எவராவது சிபார்சு செய்ய விரும்பினால் அவருக்கு ஒரு நற்சாட்சிப் பத்திரத்தைக் கொடுத்து உதவலாம். அவ்விதம் செய்யாமல் அவருக்கு ஆதரவு தேடவோ, செல்வாக்குப் பெறவோ முயன்றால் சம்பந்தப்பட்ட தகைமையை இழக்கலாம்.

18. விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட எத்தகவலும் பிழையானவை எனக்காணப்படின் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும். சேவையில் சேர்க்கப்பட்டபின் எத்தகவலும் பிழையானவையெனக் காணப்படின் கடற்படையிலிருந்து விலக்கப்படுவதுடன் தண்டனைக்கும் உள்ளாவர்கள்.

டீ. வீ. ஹன்ரர்,
கொமொடோர்,
பதில்—கடற்படைத் தளபதி.

கொழும்பு,
1970 ம் ஆம் செப்டெம்பர் மீ 18 ந உ.

## விண்ணப்பப் பத்திரம்

### மாலுமிகள் நியமனம்—இலங்கை அரச கடற்படை

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில்) : ————.
2. தபால் விலாசம் : ————.
3. மாகாணம் : ————.
4. பிறந்த திகதி : ————.
5. 1971 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி வயது : ————.
6. சித்தியடைந்துள்ள கூடுதலான கல்வித் தராதரம் (பாடங்களும் திகதிகளும் தருக) : ————.
7. கல்வி கற்ற பாடசாலைகளின் பெயர்கள் : ————.
8. வேறு தகைமைகள் : ————.
9. விளையாட்டுச் சம்பந்தமான தகைமைகள் : ————.
10. பாடசாலையை விட்டபின் செய்த தொழில் (பூரண விபரம் தருக) : ————.
11. விண்ணப்பகாரரின் தற்போதைய தொழில் : ————.
12. உயரம் : ————. நிறை : ————. மார்பு அளவு : ————.
13. தேசிய இனம் : ————.
14. அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையம் : ————.
15. இராணுவ, கடற்படை, ஆகாயப்படை, தொண்டர்படை ஆகிய பிரிவுகளில் சேவை செய்திருந்தால், அப்பிரிவு, திகதிகள் ஆகியவற்றுடன் பூரண விபரம் தருக : ————.

16. (15 ஆம் பந்தியில்) கூறப்படும் சேவையிலிருந்து விலகிய பொழுது உமது நடத்தை : ————.

17. தொடர்புடைய வேறு தகுதிகள் இருப்பின் விபரங்கள் : ————.

18. நற்சான்றிதழ்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் தகுதிகளும் : ————.

(அ) ........................................................................ பகுதிக் கிராம சேவையாளர்

(ஆ) ........................................................................

(இ) ........................................................................

(ஈ) ........................................................................

மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு என்னால் கொடுக்கப்பட்ட விடைகளும் தகுதிகளும் எனது அறிவுக்கெட்டியவரை சரியானவையென்று உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

9–1031—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

---

## தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்

### பதவி வெற்றிடங்கள்

தகுந்த தகைமைகளும் அனுபவமும் பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு 1970 அக்டோபர் 9 ம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுகொள்ளப்படும்.

**உப்பு உத்தியோகத்தர் பதவி தரம் III**

சம்பளத் திட்டம்.—ரூபா 350—5 × 20—450 (மாதாந்தம் எல்லாமுட்பட).

தகைமைகள்.—சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தேறியவரும், அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியிலிருந்து கனிஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் சான்றிதழ் பெற்றவராகவும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு சர்வகலாசாலையில் இரசாயனம் ஒரு பாடமாக விஞ்ஞானப் பட்டம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

வயது.—30 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**சுருக்குத் தட்டச்சாளர் பதவி தரம் III**

சம்பளத் திட்டம்.—ரூபா 280—7 × 10—350 (மாதாந்தம் எல்லாமுட்பட).

தகைமைகள்.—(1) சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தேறியவராயிருத்தல் வேண்டும்.

(2) சுருக்குத் தட்டச்சு வேகம்—
நி. சொ. 65 வீதம் சுருக்கெழுத்து (ஆங்கிலம்)
நி. சொ. 40 வீதம் தட்டச்செழுத்து (ஆங்கிலம்)
அல்லது
நி. சொ. 60 வீதம் சுருக்கெழுத்து (சிங்களம்)
நி. சொ. 25 வீதம் தட்டச்செழுத்து (சிங்களம்)

அனுபவம்.—சுருக்குத் தட்டச்சாளராக 2 வருட அனுபவம் பெற்றிருத்தல வேண்டும்.

வயது.—30 வயதிற்குட்பட்டவராயிருத்தல் வேண்டும்.

ஆங்கில சுருக்குத் தட்டச்சாளர்களும் தட்டச்சாளர்களும் நியமன காலத்திலிருந்து 2 வருட காலத்திற்குள் சிங்களச் சுருக்குத்தட்டச்சிலும், தட்டச்செழுத்திலும் தேர்ச்சி பெற வேண்டும்.

**கணக்காளர் பதவி**

தகைமைகள்.—(1) தத்துவம் பெற்ற கணக்காளர் நிலையத்தின் இடையான பரீட்சை அல்லது செலவுக் கணக்காளர் நிலையத்து (பகுதி 1, 2, 3) பரீட்சையில் தேறியபின் மூன்று வருடகால அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

சம்பளத் திட்டம்.—ரூபா 800—7 × 45—1,115 (மாதாந்தம் எல்லாமுட்பட).

அலுவலகத்தில் பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் விண்ணப்பிக்க வேண்டும். இப் பத்திரங்களை சொந்த விலாசமிட்ட முத்திரை பதித்த 9″ × 4″ தபாலுறைகளை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் தபாலுறையில் பதவியைக் குறித்து ஆளணி உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட வேண்டும். அரசாங்க திணைக்கள/கூட்டுத்தாபனப் பணியாளர்களின் விண்ணபபங்கள் அவவத் திணைக்களங்கள்/கூட்டுத்தாபனங்கள் தலைவர்களூடாக அனுப்பப்பட வேண்டும்.

தலைவர்.

தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்,
த. பெ. இல. 1334,
சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை,
கொழும்பு–2,
1970 செப்ரம்பர் 12 ம் திகதி.

9–1015—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

---

இல. வெ.மு/4/105

## கல்வி அமைச்சு

### ஹொங்கொங்கில் செல்லுபடியான பொதுநலவரசுப் புலமைப் பரிசில்கள்—1971 ஆம் ஆண்டு

கட்டடக் கலையில் (பி. க. வே. நி.—R. I B. A. தகைமை) II ஆம் பகுதிப் பயிற்சி நெறியைப் பின்பற்றுதற்கு பொதுநலவரசுப் புலமைப் பரிசில, இணையுரிமைப் பரிசுத் திட்டத்தின் கீழ் வழங்கபடுபவையும் ஹொங்கொங் பல்கலைக் கழகத்தில் 1971 ஆம் கழகவாண்டின் ஆரம்பத்திலிருந்து செலலுபடியானவையுமான புலமைப் பரிசில்களை அளித்தற் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிபிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப் புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுளளன.

குறிப்பு 1. புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச் சுற்றுநிருபத்தில் கேடடுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு 2. சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேடகப்பட வேண்டும்.

2. கால எல்லை.—புலமைப் பரிசில்கள் சாதாரணமாக இரண்டு வருட கால அளவினதாகும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியினறி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில இல்லாமை, படிப்பில் திருபதியறற முன்னேற்றம், பரீடசைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு ஹொங்கொங் அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தினபோது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெறறவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுத்திறன்.—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.
(ii) 1.10.1971 அன்று 35 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) கட்டடக் கலையில் (பி. க. வே. நி.—R. I. B. A. தகைமை) I ஆம் பகுதிப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். (தூன சித்தி பெற்றவர்கள் விண்ணப்பித்தற்கு உரித்திலர்).

(iv) ஆங்கிலத்தில் உயர்ந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு 1. அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையின் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறிசெய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.10.1971 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு 2. தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களுந் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (எ)ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. அளிப்பு நிபந்தனைகள்.—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும்—

(அ) போய் வருவதற்கான பயணச் செலவு (சாதாரண மிகவும் சிட்டிய ஆகாய விமானச் சிக்கன வகுப்பு).

(ஆ) பல்கலைக் கழகக் கட்டணம்.

(இ) மாதாந்தம் H K $1,000 தாபரிப்புச் சகாயப்படி.

(ஈ) புத்தகங்களுக்கும் உபகரணங்களுக்குமாக வருடாந்தம் H K $400 சகாயப்படி அல்லது ஹொங்கொங்குக்கு வெளியே செலவு செய்யப்படின் £25 தேளிங்கு.

(உ) மேலதிக பிரயாணச் சகாயப்படி—வருடாந்தம் H K $400.

(ஊ) உடைகளுக்கான சகாயப்படி (அவசியமாயின்) HK $640, அல்லது ஹொங்கொங்குக்கு வெளியே செலவு செய்யப்படின் £40 தேளிங்கு.

(எ) மருத்துவ வசதிகள்—பல்கலைக் கழக சாதாரண சுகாதார சேவைகளும், அரசாங்க வைத்தியசாலைகளில் இலவச மருத்துவ சிகிச்சையும், வைத்தியசாலைகளிலான தாபரிப்புக் கட்டணம், பற்சிகிச்சை, கண்சிகிச்சை யாதேனும் செவிப்புல துணைச் சாதனங்கள் அல்லது கருவிகளுக்கான செலவு இவற்றில் அடங்கவில்லை.

(ஏ) விண்ணப்பிக்கும் நேரத்தில் விவாகஞ் செய்திருப்பின், விவாகஞ் செய்துள்ள மாணவருக்கு (அவரே இடவசதியை ஒழுங்கு செய்ய வேண்டுமென்பதற்கமைய) மேலதிக தாபரிப்புச் சகாயப்படி கொடுபடும். இந்நிபந்தனைகளுக்கமையவே அவருடைய மனைவிக்குப் பயணச் செலவு கொடுபடும்.

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. நேர்முகப் பரீட்சை.—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய இருக்க வேண்டும்.

6. உடன்படிக்கை.—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், ஹொங்கொங்குக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியராகவிருப்பின் பொருத்தமாயவிடத்து சம்பளங்கள், சகாயப்படிகள் ஆகியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. வைத்திய பரீட்சை.—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஹொங்கொங்கில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய உடல் நலன், மனநலன் உடையவரா என பார்ப்பதற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவுசெய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவுசெய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீட்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபைப் பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனம் அளிப்பாகுமென கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2 மலாய வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூ. 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்ப படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரர்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தல் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறப்படாவிடின் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீராக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

பி. உடகம,
நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1970 ம் ஆண்டு செப்டம்பர் மீ 7 ந உ.

9–959—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

## கல்வி அமைச்சு

### பதவி : சித்திரப் பரிசோதகர் (சிங்களம்)

கல்வி அமைச்சிலுள்ள சித்திரப் பரிசோதகர் பதவிக்கு, கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு " நிரந்தரக்காரியதரிசி (பொது நிருவாகக்கிளை), மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு 1970 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. சம்பள அளவுத்திட்டம்.—இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—
ரூ. 4,296—144 × 16—6,600 வருடாந்தம். வருடாந்தச் சம்பளம் ரூ. 5,304 பெறமுன் வினைத்திறமைகாண் தடை உண்டு.

3. நியமன நியதிகள்.—(i) இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். நியமனம், முதற்கண் மூன்று வருடகாலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும்.

(ii) விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அவர் அரசாங்க சேவைச் சகாய நிதி நலன்களுக்கு உரித்துடையராவர். இந்நோக்கத்துக்கு அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு அவர் தனது சம்பளத்தில் 5 வீதம் செலுத்த வேண்டும். அவர் சேமலாப நிதிக்குத் தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறாரென 10 வருட சேவையைப் பூர்த்தி செய்யுமுன் எந்நேரத்திலேனும் தெரிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேமலாப நலன்களைக் கொண்ட ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும் அவர் ஏற்கனவே 10 வருட சேவையை பூர்த்தி செய்திருப்பின் நியமிக்கப்படும் ஆறு மாத காலத்திற்குள் தனது விருப்பத்தை அவர் தெரிவிக்க வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படுபவர், நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான சேவையில் ஏற்கனவே உள்ளவராயின், அவருடைய நியமனம் முதற்கண் பதில் முறையில் அமையும்.

4. சேவை நிபந்தனைகள்.—அரசினர் சேவைக்குப் புதிய முறைப்படி நியமிக்கப்படும் ஒருவரைப் பொறுத்த வரையில், அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கங்களின் பொருட்டு—

(i) அவருடைய தகுதிகாண்/பரிட்சார்த்த காலம் மூன்று வருடங்களாகும் ;

(ii) அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறையில் கொண்டு வருவதற்கு, குறிப்பாக, 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தற்பொருட்டு ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகளுக்கமைய அவர் ஒழுக வேண்டும் ;

(iii) தகுதிகாண்/பரிட்சார்த்த காலத்தில் அவர் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டும் ;

(iv) தகுதிகாண்/பரிட்சார்த்த கால முடிவில் அவர் பதவியில் உறுதிப்படுத்தப்படுதல், ஏனைய விடயங்களுடன், ஒரு வருடத்துக்குள், இரண்டு வருடங்களுக்குள், மூன்று வருடங்களுக்குள் முறையே I ஆந் தர, II ஆந் தர, III ஆந் தர தேர்ச்சிப் பரிட்சைகளில் சித்தியடைதலைப் பொறுத்ததாகும். (I ஆந் தர பரிட்சையில், காரியத்திற்கேற்ப ஒரு வருடத்தில் அல்லது இரண்டு வருடங்களில் சித்தியடைய வேண்டும்). விதிக்கப்பட்ட காலத்துக்குள் இப்பரிட்சைகளில் சித்தியடையத் தவறின் சம்பள உயர்ச்சிப்பணம் இடை நிறுத்தப்படும். விதிக்கப்பட்ட காலத்திலிருந்து மேலும் ஆறு மாத காலத்துக்குள் குறித்த ஒரு பரிட்சையில் சித்தியடையாவிடின் இடைநிறுத்தம் செய்யப்பட்ட சம்பள உயர்ச்சிப் பணம் நிறுத்தப்படும். அவ்வாறு நிறுத்தப்பட்ட சம்பள உயர்ச்சிப் பணம் பரிட்சையில் சித்தி எய்தும்வரை அல்லது (v) ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகள் அமையும்வரை, தொடர்ந்து நிறுத்தி வைக்கப்படும்.

(v) தகுதிகாண்/பரிட்சார்த்த கால முடிவில் விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சி பெற்றுக் கொள்ளப்படாவிடின், 120 ஆம், 121 ஆம் இலக்க நிருவாகப் பிரமாணங்களின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும்.

5. தேவைப்படும் தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) 1970 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆந் திகதியன்று 23 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு அமையாது ;

(ஆ) வித்தியா பகுதியால் வழங்கப்படும் வரைதல் ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும் அல்லது அரசினர் நுண்கலைக் கல்லூரியில் வரைதலிலும் ஓவியத்திலும் நடாத்தப்படும் பொதுப் பயிற்சி நெறியை அல்லது உயர்தர பயிற்சி நெறியைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் அல்லது சாந்திநிகேதன விஸ்வபாரதி கலா பவனத்தால் நடாத்தப்படும் நாலு வருட கலை, கைப்பணிப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் வழங்கப்படும் தகுதித் தேர்வுப் பத்திரத்தைப் பெற்றிருக்க வேண்டும் ;

(இ) சிங்கள மொழியுடன் அல்லது இலக்கியத்துடன் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரிட்சையில் அல்லது சிங்கள மொழியும் எண்கணிதம்/கணிதமும் உட்பட ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணதர) பத்திரப் பரிட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றிச் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

(ஈ) வரைதல் கற்பித்தலில் குறைந்தபட்சம் 5 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ;

(உ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை—மூலப் பிரதிகளையல்ல—இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு.கு.—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்பட மாட்டாது) ;

(ஆ) மிக உயர்ந்த கல்வித் தகைமையை/உயர்தொழில் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் குறிப்பிடும் சான்றிதழ்கள் ;

(இ) விண்ணப்பதாரியின் ஒழுக்கத்தையும் இப்பதவிக்கான அவருடைய தகுதியையும் குறிப்பிடும் மூன்று சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள அபேட்சகர்கள் இவ்வுப்பிரிவின் கீழ் கேட்கப்படும் நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை).

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்படுள ; அவற்றைப் பார்க்க.

8. அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் ஒன்றும் வழங்கப்படமாட்டா. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கமைய விண்ணப்பப் படிவங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

9. அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தம் பகுதி/நிலைய தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதி/நிலையத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்றும் நியாயமான காரணங்களைக் காட்டி, அவற்றை ஏற்றுக் கொளளும்படி அப்பகுதி/நிலையத் தலைவர் சிபாரிசு செய்தாலன்றி, ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

10. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டமைபற்றி அறிவிக்கப்படும். அத்தகைய அறிவித்தலை இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 3 கிழமைகளுக்குள் பெறத்தவறின் அபேட்சகர்கள், கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் அபேட்சகர்கள் தமது உரிமை சோதுக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

பி. உடகம,
நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

பொ. நி./22/24,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 16 ந் உ.

## (மாதிரி விண்ணப்பப் படிவம்)

### சித்திரப் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் : ————.
(தெளிவாக எழுதவும்)

2. தபால் விலாசம் : ————.

3. 15.10.1970 அன்றுள்ளபடியான வயது : ———— வரு : ———— மா : ———— நா : ————.

4. சாதியமும் அது எவ்வாறு பெறப்பட்டதென்பதும் : ————.

5. பின்வருவோர் பிறந்த இடம் : —
   (அ) விண்ணப்பதாரி : ————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.

6. சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரமா அல்லது சமமான உயர்ந்த தராதரப் பத்திரமா பெற்றிருக்கிறீர் : ————.
(பெற்றிருக்கும் தராதரப் பத்திரத்தின் பெயர், பரீட்சைக்குத் தோற்றிய மொழி, எடுத்த பாடங்கள் ஆகிய விபரங்கள் கொடுக்கவும்—தராதரப பத்திரத்தின பிரதி இணைக்கப்பட வேண்டும்)

7. சித்திரத்தில் பெற்றுள்ள தகைமைகள் : ————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்).

8. பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள அறிவு : —
   (அ) சிங்களம் : ————.
   (ஆ) தமிழ் : ————.
   (இ) ஆங்கிலம் : ————.

9. படித்த பாடசாலைகளும் கல்லூரிகளும் : ————.

10. தற்போதைய உத்தியோகம் பற்றிய விபரங்கள் : ————.
(ஆசிரியராயின பதிவிலக்கம், பாடசாலைப் பெயர், சம்பள விகிதம், தற்போதைய வருடாந்தச் சம்பளம், அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி ஆகிய விபரங்களைக் கொடுக்கவும்).

11. சித்திரம் படிப்பிப்பதில் பெற்றுள்ள அனுபவம் (கீழ்க்காணும் முறையில் விபரங்களைக் கொடுக்கவும்) : —

| பாடசாலையின்/கல்லூரியின் பெயர் | வகித்த பதவி | சேர்ந்த திகதி | விலகிய திகதி | சேவைக்காலம் | | | விலகியதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | நா. | மா. | வரு. | |
| | | | | | | | |

12. யுத்த சேவை புரிந்திருப்பின, அதன் விபரம் : ————.
(விலகற் சான்றிதழின பிரதி இணைக்கப்படல் வேண்டும்).

13. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் (இவர்கள் உறவினர்களாயிருக்கலாகாது) பெயர்களும் பதவிப் பெயர்களும் : ————.
(மூன்று நற்சாட்சிப பத்திரங்களின பிரதிகள்—மூலப் பிரதிகளல்ல—இணைக்கப்பட வேண்டும். அரசினர் சேவையிலுள்ளவர்கள் இவைகளை அனுப்ப வேண்டியதில்லை.

14. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன என அறிவேன.

திகதி : ————.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

9-960—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

---

## அஞ்சல் தந்தித்திணைக்கள உபஅஞ்சல் அதிபர் பதவி
## கிடெல்லான மாநகரசபை—இரத்தினபுரி

கிடெல்லான இரத்தினபுரி மாநகரசபை உபஅஞ்சல் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆகக் குறைந்த மாதாந்த அலவுன்சு 75 ரூபாவாகும்.

1. விண்ணப்பதாரர் இலங்கையராயும் 20. 10. 1970 அன்று 21 வயதுக்கு மேற்பட்டவராயும் 45 வயதிற்கு உட்பட்டவராயும் இருத்தல் வேண்டும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

2. மாநகரசபைப் பிரதேசத்துள் 10 வருடத்திற்கு அல்லது அதற்கு கூடுதலாக நிரந்தர வாசியாக இருத்தல் வேண்டும்.

3. சிரேட்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில்/கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (சாதாரண) சிங்களம்/தமிழ் பாஷையும் கணிதம்/ஆரம்ப கணிதம் ஆகியவற்றுடன் மூன்று பாடங்களுடன் சித்தியடைந்தவராய் இருத்தல் வேண்டும்.

4. தற்பொழுது கிடெல்லான உப அஞ்சல் அலுவலகம் இருக்கும் பிரதேசத்தில் உப அஞ்சல் அலுவலகத்தை நிறுவுவதற்காக ஒரு தகுந்த கட்டடம் விண்ணப்பதாரரால் வாடகையின்றி வழங்கப்படல் வேண்டும்.

5. இரத்தினபுரி, போட்லெனிலுள்ள சப்பிரகமுவா அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்றுக் கொண்ட உரோணியோ செய்யப்பட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 20. 10. 1970 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அவரை அடையுமாறு அனுப்பப்படல் வேண்டும்.

சப்பிரகமுவ அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து மேலதிக விபரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

வேணன். எம். அபயசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும், தந்திப் போக்குவரத்து அதிபரும்.

9-985—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

## சிறுவர் நல்லொழுக்கப் பரிபாலன திணைக்களம்

### சிங்களத்தில் பயிற்சியடைந்த ஆசிரியர்களின் பதவிகள்

### ஆண்களும் பெண்களும்

சிறுவர் நல்லொழுக்கப் பரிபாலன திணைக்களத்தில் சிங்களத்தில் பயிற்சியடைந்த ஆசிரியை பதவிகளுக்கும், (பெண்கள்), சிங்களத்தில் பயிற்சியடைந்த ஆசிரியர் பதவிகளுக்கும் (ஆண்கள்) ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பப் பத்திரங்கள் வருமாறு :

(அ) அபேட்சகர் இவ்வறிவித்தலின் அடியில் குறித்துக் காட்டப்பட்டுள்ள வகையில் மாதிரிப் பத்திரத்தினை அமைத்தெழுதல் வேண்டும்.

(ஆ) சிறுவர் நல்லொழுக்கப் பரிபாலன திணைக்களத்தின் ஆணையாளர், 103, 1/1, டிமெல் கட்டிடம், சதம் வீதி, கொழும்பு 1 என்று முகவரியிடப்படுவதேயன்றி பெயர் காட்டி முகவரி காட்டப்படலாகாது.

(இ) 15.10.1970 திகதியன்றோ அதற்கு முன்பாகவோ கந்தோருக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவு செய்யப்பட்ட கடிதத்தில் அனுப்பப்படல் வேண்டும்.

3. சம்பளம்—வருடாந்த திரட்டுச் சம்பளம் : ரூபா 3,720—90×8 ம் 144×11—6,024 ஆகும். அடிப்படைச் சம்பளம் : ரூபா 1,560—72×10 ம் 120×9—3,360 ஆகும்.

4. நியமன விதிகள்.—(i) பதவிகள் நிரந்தரமும் இளைப்பாற்றுச் சம்பளமுமுடையது.

(ii). தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு அமைவர். குறிக்கப்பட்ட தகுதிகாண் காலத்திற்குள் அவர்களின் சேவை திருப்திகரமாக இல்லையேல் எவ்வேளையிலும் தகுதிகாண் காலத்திற்குள் அல்லது அதன் முடிவு காலத்திற்குள் விலக்கப்படுவார்கள்.

(iii) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் சான்றிதழ் பெற்ற பாடசாலைகளின் மேலதிகமான பாடவிதானங்களின் முயற்சியில் ஈடுபடுதலும், இலங்கை பூராவிலும் சேவை செய்தலும் வேண்டும்.

5. வேண்டிய தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் திருப்திகரமான பிவ்காட்டியுள்ள அத்தாட்சிகள் காட்டப்படவேண்டும்.

(அ) இலங்கை வாசி ;

(ஆ) 15.10.1970 திகதி விண்ணப்பகாரர் 24 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதிற்கு மேற்பட்டாதவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) சிங்களத்தில் பயிற்சி ஆசிரியர் பரீட்சையில் சித்தியடைந்தவராயும் ;

(ஈ) குறைந்த பட்சம் 3 வருடகாலமாகப் பயிற்சியடைந்த ஆசிரியராக படிப்பித்தலில் அனுபவமுடையவராகவும இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—சமூக சேவை வேலைகளில் செய்முறையில் அனுபவமடைந்தவரும், தகைமையும் உடைய அபேட்சகருக்கு முன்னுரிமை கொடுபடும்.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் மேற்காட்டப்பட்ட 5 ம் பந்தியின்படி தகைமையுடையவராயிருந்தால் விண்ணப்பப் பத்திரங்கள் அவர்களின் வேலைபார்க்கும் திணைக்களத் தலைவர் மூலமாக அனுபபப்படல் வேண்டும். குறிக்கப்பட்ட திகதிக்குப் பின்னுல் இந்தக் கந்தோருக்கு அனுப்பப்படும் விண்ணப் பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஆனால் குறிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் திணைக்களத் தலைவர்களால் குறிக்கப்பட்ட திகதிக்குள் கிடைத்ததென்றும், விண்ணப்பப் பத்திரத்தை ஏற்றுக் கொள்ளும்படி போதிய காரணம் காட்டி சிபார்சு செய்தால் அவ்விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

7. இந்த வர்த்தமானியில் பகுதி I, தொகுதி II ன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனையைப் பார்வையிடுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றது.

8. அறிவித்தலின் தேவைகளுக்கு அடங்காத விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப் பத்திரங்கள் பெற்றமை ஒப்புக் கொள்ளப்படமாட்டாது.

டபிள்யூ. ஆர். பி. ராஜகருணு,
சிறுவர் நல்லொழுக்கப் பரிபாலன ஆணையாளர்.

சிறுவர் நல்லொழுக்கப் பரிபாலன திணைக்களம்,
த. பெ. 546—கொழும்பு 1,
1970 ஆம் ஆண்டு புரட்டாதி 9 ம் திகதி.

### குறிக்கப்பட்ட படிவம்

சிங்களத்தில் பயிற்சி அடைந்த ஆசிரியர் பதவிக்கும்,
சிங்களததில் பயிற்சியடைந்த ஆசிரியை
பதவிகளுக்குமான விண்ணப்பப் பத்திரம்

1. முழுப் பெயர் :————.
(பெரிய எழுத்தில் எழுதவும்)
2. நிரந்தர விலாசம் :————.
3. ஆணு, பெண்ணு ? :————.
4. வயதும் பிறந்த திகதியும் :————.
(பிறப்புக் கொப்பியின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
5. விவாகமானவரா ? அல்லது விவாகம் செய்யாதவரா ? :—.
————.
6. கல்வித் தகைமையும் வேறேதேனும் தகைமைகளும், விளம்பரத்தில் வேண்டியபடி அனுபவங்களும் :————.
(சான்றிதழ் படிகள் இணைக்கப்படல் வேண்டும்)
7. கல்விப் பேறுகளும் பாடசாலைப் பதவிகளும் .————.
8. பாடசாலையை விட்டகாலம் செய்த தொழில்களைப் பற்றிய பட்டோலையும், அரசாங்கத்தின் கீழ் தொழில் செய்திருந்தால் அதன் விபரங்களும் :————.
9. தற்போதைய தொழில் ஏதும் இருந்தால் அதன் பதவியும் விலாசமும் :————.
10. நற்சாட்சிப் பத்திரம் கொடுத்தவர்களின் பெயரும் பதவியும் :————.
(பிரதிபடிகள் இணைக்கப்படல் வேண்டும்).

என்னுல் மேற்கூறப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையென்றும், உண்மையானவையென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :————.

9-958—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

---

## கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம்

### பணியாளர் பயிற்சிப் பதவிகள்

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் பணியாளர்கள் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

தகைமைகள்.—(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் பட்டதாரி. முதலாவது அல்லது இரண்டாந்தரத் தராதரம் பெற்றவர்கள் விரும்பத்தக்கது.

(ஆ) விண்ணப்பத் திகதியன்று வயது 30 க்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

இந்த ஸ்தாபன ஊழியர் யாராவது விண்ணப்பிக்கும் போது மேற்படி வயதுக் கட்டுப்பாடு இருக்கமாட்டாது.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்குப் பயிற்சி காலத்தில் செலவுப்படி ரூபா 500 கொடுக்கப்படும். ஒரு வருடத்திலிருந்து இரண்டு வருடங்களுக்கான பயிற்சி காலத்தில், திருப்திகரமாகத் தேறிய பயிற்சியாளர்கள், கூ. மொ. ஸ்தாபனப் பணியாளர் பதவிகளில் பின்வரும் சம்பள அளவுத்திட்டத்தில் நியமனம் பெறுவார்கள்.

சம்பள அளவுத்திட்டம்.—மாத மொன்றிற்கு ரூபா 600—10×40, 5×50—1,250 (ஒன்று திரட்டிய சம்பளம்)

விண்ணப்பங்கள், ஆட்கள் தொகுதி முகாமையாளருக்கு 1.10.70 க்கு முன்னதாக, கல்வித் தராதரம், பிறப்பு, பற்றிய சான்றிதழ்ப்பத்திரங்களுடன், விண்ணப்பதாரியின் குணம், திறமை பற்றி உத்தரவாதம் அளிக்கும் இருவருடைய விலாசங்களுடன், கூ. மொ. விற்பனவு ஸ்தாபனம், 21, வக்சால் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

எந்த வகையிலாவது விண்ணப்பதாரர்கள் ஆதரவு தேடுதல் (Canvassing) விண்ணப்பங்களை நிராகரிக்க ஏதுவாகமுடியும்.

ஆட்கள் தொகுதி முகாமையாளர்.

கூ. மொ. வி. தலைமைக்காரியாலயம்,
21, வக்சால் வீதி,
கொழும்பு 2,
15.9.70.

9—877/1—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

## கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம்

### போக்குவரத்து இலாகா முகாமையாளர் பதவி

மேற்படி பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பள அளவுத்திட்டம்.—ரூபா 1,250—50—1,500 (ஒன்றுதிரட்டிய சம்பளம்)

தகைமைகளும் அனுபவமும்.—சிரேஷ்ட அல்லது அதற்குக் கூடிய கல்வித் தராதரத்தில் சித்தி பெற்றிருப்பதுடன்—மோட்டார் வாகனங்கள் பழுதுபார்ப்பதில் சிறந்த அறிவும், அநேக மோட்டார் வாகனங்களைக் கையாளும் அனுபவம் 10 வருடங்களுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும். அல்லது,

மோட்டார் இயந்திர இயல் பட்டதாரிப் பொறியியலாளரும், மோட்டார் பழுதுபார்ப்பதில் அறிவுடையவரும், அநேக மோட்டார் வாகனங்களைக் கையாளும் அனுபவம் இரண்டு வருடத்திற்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும். அல்லது,

மோட்டார் வாகனங்கள் பழுதுபார்ப்பதில் சிறந்த அறிவும், அநேக மோட்டார் வாகனங்களைக் கையாளுவதில் ஐந்து வருட அனுபவத்திற் குறையாமலும் இருந்து, அத்துடன், கட்டுபெத்தைப் பொறியியல் நிறுவனத்திலிருந்து, அல்லது காடிப் பொறியியல் நிறுவனத்திலிருந்து, மோட்டார் இயந்திர இயலில் J. T. O. பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது.—45 வயதிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

சேமலாபநிதி.—10 சதவீதம் ஊழியர் ; 15 சத வீதம் கூ. மொ. தா.

தகைமைகளையும், வயதையும் நிரூபிக்கும் அத்தாட்சிப்பத்திரங்களுடன், விண்ணப்பங்கள், 1.10.70 முன்னதாகக் கிடைக்கும்படி காரியாலயத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

ஆட்கள் தொகுதி முகாமையாளர்.

பரிபாலனக் கிளை,
கூ. மொ. வி. தலைமைக் காரியாலயம்,
13.9.70.

9–877/2—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

இல. 1/23/2/19/ஜீ

1969 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் தேதி நடாத்தப்பட்ட பரீட்சையின் முடிவின்பேரில் பொது எழுதுவினைஞர் சேவையின் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பின் II ஆந் தரத்திற்கு பதவியேற்றம் பெறுவதற்கு பின்வரும் பரீட்சார்த்திகள் அவர்களின் தகவுத் திறனுக்கமைவாகத் தெரியப்பட்டுள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

| பெயர் | திணைக்களம் |
|---|---|
| அபேசிங்க, டீ. ஈ. | தொழில் |
| அபேவிக்கிரம், எல். ஏ. பி. | கல்வி அலுவலகம், காலி |
| அகங்கமபது, எச். | சுகாதாரம் |
| அலவத்தகம, எஸ். | கச்சேரி, கண்டி |
| அல்விஸ், எல். டபிள்யு. | சுகாதாரம் |
| அமரதாச, டி. ஜீ. | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு |
| அமரசிங்க, எம். | கச்சேரி, புத்தளம் |
| ஆரியதாச, ஆர். | கல்வி அலுவலகம், மாத்தறை |
| ஆரியபால, எல். | கடற்றொழில், கைத்தொழில் அமைச்சு |
| ஆரியரத்ன, எச். டி. | பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சு |
| ஆரியரத்ன, என். எச். பி. பி. | பிசுக்கால், கொழும்பு |
| ஆரியசேன, டபிள்யூ. எச். | இலங்கை கரும கர்த்தா அலுவலகம், சுவிற்சர்லாந்து |
| ஆரியவன்ச, எச். ஏ. | வன சீவராசி |
| அருணபிரியாநந்த, டபிள்யூ. பி. கே. | நீர்ப்பாசனம் |
| பத்தேவல, எஸ். பி. | நில அளவை |
| பாலசுப்பிரமணியம், வி. | அரசாங்க அச்சகம் |
| பாலசூரிய, கே. எச். | கச்சேரி, மாத்தறை |
| பண்டார, எம். பி. எம். ஆர். | கச்சேரி, கொழும்பு |
| பண்டார, என். டபிள்யூ. பி. | மின்சாரம் |
| பத்தகொட, சீ. எச். | உள்நாட்டு இறைவரி |
| சந்திரதாச, கே. யூ. ஜீ. | உயர்நீதி மன்றம், கொழும்பு |
| சந்திரசேகர, ஏ. எம். எச். | பரீட்சை |
| சந்திரசேகர, எல். ஜீ. ஜீ. | இறக்குமதி, ஏற்றுமதி |
| சந்திரசேன, கே. டி. | அரசாங்க சேவை ஆணைக்குழு |
| சந்திரசோமா, ஆர். | உள்நாட்டு இறைவரி |
| சிறில், ஆர். பி. | மின்சாரம் |
| டானியல், எம். கே. | பெருந்தெருக்கள் |
| தயாரத்ன, கே. ஈ. | கச்சேரி, காலி |
| தயாரத்ன, எம். பி. | சுகாதாரம் |
| தயாரத்ன, எஸ். ஜீ. | விவசாயம் |
| தயாசேன, என். | புவிவரலாற்றியல் கணிப்பு |
| தயாசேன, எஸ். எம். | கச்சேரி, கொழும்பு |
| தயாவர்த்தன, ஆர். | கச்சேரி, கொழும்பு |
| டீ. அல்விஸ், ஈ. டீ. எஸ். | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு |
| டீ. மெல், டபிள்யூ. எஸ். ஈ. | ஜேர்மனியிலுள்ள இலங்கை தூதுவராலயம் |
| தொரணியகல, ஆர். | கச்சேரி, கேகாலை |
| டீ சில்வா, டி. ஜீ. ஏ. | மதுவரி |

| பெயர் | திணைக்களம் |
|---|---|
| டீ சில்வா, எச். எஸ். | சுங்கம் |
| டீ சில்வா, கே. பி. பி. | கச்சேரி, களுத்துறை |
| டீ சில்வா, கே. எஸ். | வனபரிபாலனம் |
| டீ சில்வா, எம். கே. ஏ. | கச்சேரி, அம்பாந்தோட்டை |
| டீ சில்வா, ஆர். ஏ. | சுகாதாரம் |
| டீ சில்வா, எஸ். கே. ஏ. | காணி அபிவிருத்தி |
| டீ சில்வா, யூ. ஏ. டபிள்யூ. | தொழில் |
| தேவபுர, பி. | அரசாங்க சேவைச் சகாய நிதி |
| தனபால, டபிள்யூ. ஏ. | கமத்தொழிற் சேவைகள் |
| தனபால, டபிள்யூ. எம். | கச்சேரி, பதுளை |
| தனசேன, எச். ஏ. | கல்வி அலுவலகம், கண்டி |
| தனவர்தன, ஆர். எம். | கைத்தொழில், கடற்றொழில் அமைச்சு |
| தர்மதாச, ஏ. கே. | கமத்தொழிற் சேவைகள் |
| தர்மதாச, டீ. பி. | நன்னடத்தை பாதுகாவல், குழந்தை பேணல் |
| தர்மரத்ன, பி. | பொலிஸ் |
| தர்மசேன, வீ. | கைதொழில், கடற்றொழில் அமைச்சு |
| டயஸ், எச். ஏ. ஆர். | கச்சேரி, அம்பாறை |
| திசநாயக்கா, டி. டி. ஜீ. | பிசுக்கல், கேகாலை |
| தொடங்கொட, என். | கச்சேரி, காலி |
| எதுசூரிய, ஆர். ஜீ. | சுகாதாரம் |
| எட்வர்ட், ஏ. | கச்சேரி, மாத்தறை |
| ஏகநாதன், ஐ. | நீதவான் மன்றம், சாவகச்சேரி |
| பர்ளுந்து, ஜே. ஏ. சி. எல். | கச்சேரி, களுத்துறை |
| பர்ளுந்து, கே. என். எச். | கல்வி அலுவலகம், இரத்தினபுரி |
| கலகெதர, ஜெ. | உள்நாட்டு இறைவரி |
| கணேகம, பி. | கமத்தொழில் |
| கணேசன், எஸ். | உள்நாட்டு இறைவரி |
| கொடே விதாரன, கே. | கச்சேரி, காலி |
| ஞாணரத்ன, எம். | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு |
| குணதாச, எம். டீ. டபிள்யூ. | உள்நாட்டு இறைவரி |
| குணதாச, டபிள்யூ. | தொழில் |
| குணபால, எச். எல். | கல்வி அலுவலகம், மாத்தறை |
| குணரத்ன, கே. டி. பி. ரி. | கணக்காய்வு |
| குணரத்னம், எஸ். | கச்சேரி, கொழும்பு |
| குணசேகர, ஏ. பி. ஜே. | உள்ளூராட்சி |
| குணசேகர, ஜீ. ஏ. ஆர். டபிள்யூ. | சுகாதாரம் |
| குணசேன, ஓ. ஜீ. டபிள்யூ. | தேர்தல்கள் |
| குணசிங்க, யூ. டீ. ஏ. எஸ். | உள்ளூராட்சி அமைச்சு |
| குணதிலக, ஜீ. ஆர். | சுகாதாரம் |
| குணதிலக, டபிள்யூ. எம். | தொழில் |
| குணவர்த்தன, டி. | காணி ஆணையாளர் |
| குணவர்தன, பி. டபிள்யூ. | கல்வி, கலாச்சார அமைச்சு |
| ஹெண்ட்ரிக், ஜீ. எல். | கமத்தொழிற் சேவைகள் |
| ஹெரால்ட், எம். டீ. ஏ. | வனபரிபாலனம் |

| பெயர் | | திணைக்களம் |
|---|---|---|
| ஹேரத், எச். எம். கே. பி. | .. | பிரதான நீதிமன்றம், கொழும்பு |
| ஹேரத், எச். டபிள்யூ. | .. | சந்தைப்படுத்தல் |
| ஹேரத் பண்டா, ஐ. எம். | .. | கட்டடங்கள் |
| ஹெற்றியாராச்சி, ஏ. | .. | உள்ளூராட்சி அமைச்சு |
| ஹெற்றியாராச்சி, ஜி. | .. | கட்டடங்கள் |
| ஹெற்றிகொட, ஜே. | .. | தொழில் |
| ஹுனுகல்ல, பி. பி. எஸ். | .. | பொதுத் திறைசேரி |
| ஜயசேன, கே. எல். டி. | .. | கப்பற்றுறை ஆணைக்குழு |
| ஜயசேகர, கே. ஜே. ரி. எஸ். | .. | கைத்தொழில், கடற்றொழில் அமைச்சு |
| ஜயசேகர, எம். | .. | பொதுத் திறைசேரி |
| ஜயசேகர, பி. எச். | .. | பொலிஸ் |
| ஜயசிங்க, ஜே. வீ. | .. | கச்சேரி, குருநாகலை |
| ஜயசிறி, டீ. ரி. ஆர். சி. | .. | கைத்தொழில், கடற்றொழில் அமைச்சு |
| ஜயசிறி, சி. எம். எஸ். | .. | கச்சேரி, குருநாகலை |
| ஜயதிஸ்ஸ, எம். ஜி. | .. | கணக்காய்வு |
| ஜயதிஸ்ஸ, என். எஸ். | .. | கப்பற்றுறை ஆணைக்குழு |
| ஜயவர்த்தன, கே. டி. கே. எஸ். | .. | தகவல் |
| ஜயவர்த்தன, டபிள்யூ. எம். | .. | கச்சேரி, மாத்தறை |
| ஜினதாச, டபிள்யூ. பி. | .. | சுங்கம் |
| ஜே சேப், பி. சி. | .. | கட்டடங்கள் |
| களுபகண, யூ. பி. | .. | கல்வி அலுவலகம், நுவரெலியா |
| கார்த்திகேசு, ரி. | .. | சட்ட தயாரிப்பாளர் |
| கருணதாச, டபிள்யூ. பி. | .. | கச்சேரி, மாத்தறை |
| கருணநாயக, ஜி. | .. | தொழில் |
| கருணரத்ன, ஏ. ஏ. | .. | இலங்கைத் தூதுவராலயம், வாசிங்டன் |
| கருணரத்ன, ஜே. ரீ. | .. | கச்சேரி, கேகாலை |
| கருணரத்ன, கே. ஏ. | .. | கச்சேரி, கொழும்பு |
| கருணசேன, எம். | .. | சமூகசேவைகள் |
| கருணசேன, பி. ஏ. | .. | பெருந்தெருக்கள் |
| கதிரவேலு, கே, | .. | சுகாதாரம் |
| கிருஸ்ணேஸ்வரன், வி. | .. | உள்ளூராட்சி அமைச்சு |
| குடாபண்டா, டபிள்யூ. எம். எச். கே. | | சுகாதாரம் |
| குகேந்திரபதி, கே. | .. | கச்சேரி, யாழ்ப்பாணம் |
| குலசேகரம், எஸ். | .. | உள்நாட்டு இறைவரி |
| குலசிங்கம், ஈ. கே. | .. | கச்சேரி, திருகோணமலை |
| குலதிலக, ஜி. ஐ. டி. எல். எச். | .. | அரசாங்க சேவைச் சகாய நிதி |
| குமாரகே. பி. எஸ். | .. | பொலிஸ் |
| லயனல், கே. ஜீ. | .. | தொழில் |
| லியன ஆராச்சி, எல். ஏ. எஸ். | .. | கல்வி அலுவலகம், கேகாலை |
| லியனகே, ஜே. டபிள்யூ. | .. | கச்சேரி, இரத்தினபுரி |
| லியனகே, யூ. | .. | சுகாதாரம் |
| லியனகே, யூ. எச். | .. | சுகாதாரம் |
| லொக்குசூரிய, டி. ஜி. | .. | நீர்ப்பாசனம் |
| மகாலிங்கம், என். | .. | நீர்ப்பாசனம் |
| மகாவித்தான, டபிள்யூ. | .. | கமத்தொழில் |
| மஹிந்ததாச, டி. ஜி. | .. | இறக்குமதி, ஏற்றுமதி |
| மஹிந்தசோம, கே. டபிள்யூ. | .. | நீர்ப்பாசனம் |
| மைக்கல், கே. டி. | .. | சுகாதாரம் |
| மலவியாராச்சி, ஜே. ஜி. | .. | இறக்குமதி, ஏற்றுமதி |
| மல்லவ ஆராச்சி, எம். ஏ. எச். | .. | கல்வி அலுவலகம், கம்பகா |
| மாரம்பே, டி. பி. | .. | கல்வி அலுவலகம், கண்டி |
| மிலான், ஜே. டபிள்யூ. | .. | கமத்தொழிற் சேவைகள் |
| மில்ரன், ஆர். டீ. | .. | உணவு |
| மொகெட்டி, பீ. | .. | கச்சேரி, மாத்தறை |
| முதிசிங்கராஜா, எஸ். | .. | கச்சேரி, யாழ்ப்பாணம் |
| முணசிங்க, டீ. என். எஸ். | .. | உள்நாட்டு இறைவரி |
| முனசிங்க, ஆர். டி. | .. | அரசாங்க பண்டசாலை |
| முனிதாச, டி. ஜி. | .. | கடற்றொழில் |
| முனிரத்தன, டபிள்யூ. | .. | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு |
| முருகையா, எஸ். | .. | கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் |
| முத்துபண்டா, எஸ். எம். | .. | கல்வி அலுவலகம், குருநாகல் |
| முத்துநாயக்கா, எஸ். ஜி. | .. | கல்வி அலுவலகம், குருநாகல் |
| நாகமுத்து, டபிள்யூ. | .. | கச்சேரி, யாழ்ப்பாணம் |
| நாகசேனகே, என். எஸ். | .. | உள்நாட்டு இறைவரி |
| நாணயக்கார, கே. எச். எல். | .. | கச்சேரி, காலி |
| நாணயக்கார, என். ஜீ. | .. | கட்டடங்கள் |
| நாணயக்கார, பி. எஸ். | .. | நீர்ப்பாசனம் |
| நாணயக்கார, பி. எஸ். ஜே. | .. | கமத்தொழில் |
| நந்தபால, டீ. ஏ. | .. | கமத்தொழிற் சேவைகள் |
| ஒபேசேகர, ஜீ. .. | .. | தொழில் |
| பணுகொடை, ஜே. | .. | பொதுத் திறைசேரி |
| பரமேஸ்வரன், ஏ. | .. | மின்சாரம் |
| பாஸ்கரதாஸ், ஏ. | .. | பெருந்தெருக்கள் |
| பத்திரன, எச். பி. எம். யூ. | .. | போக்குவரத்து அமைச்சு |
| பத்திரன, எஸ். டி. | .. | திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சு |
| பேமசிறி, ஏ. கே. ஏ. | .. | காணி அபிவிருத்தி |
| பெரேரா, ஏ, டி. டபிள்யு. | .. | பரீட்சை |
| பெரேரா, ஏ. எஸ். | .. | கச்சேரி, கொழும்பு |
| பெரேரா, ஐ. பி. | .. | கச்சேரி, புத்தளம் |
| பெரேரா, எம். ஆர். | .. | கமத்தொழிற் சேவைகள் |
| பெரேரா, பி. ஏ. டி. | .. | கச்சேரி, குருநாகல் |
| பெரேரா, பி. எஸ். | .. | நில அளவை |
| பெரேரா, எஸ். ஏ. எச். | .. | கச்சேரி, குருநாகல் |
| பெரேரா, ரீ. ஏ. | .. | கச்சேரி, நுவரெலியா, |
| பெரேரா, ரி. டி. | .. | கமத்தொழிற் சேவைகள் |
| பெரேரா, டபிள்யூ. ஜி. எம். பி. | .. | கணக்காய்வு |
| பீற்றர், பீ. கே. | .. | நீர்ப்பாசனம் |
| பெத்தன் ககவத்த, ஐ. | .. | அரசாங்கப் பண்டசாலை |
| பீரிஸ், பி. எவ். | .. | மின்சாரம் |
| பிர்மினஸ், டபிள்யூ. ஏ. டி. என். எம். | | குடிவரவு, குடியகல்வு |
| பியதாச, ஜி. ஏ. | .. | கல்வி அலுவலகம், இரத்தினபுரி |
| பியதாச, எச். ஜி. | .. | பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சு |
| பியதாச, எச். எச். | .. | கல்வி அலுவலகம், இரத்தினபுரி |
| பியதாச, ஆர். எச். எம். | .. | உள்நாட்டு இறைவரி |
| பியசேன, கே. ரி. | .. | கல்வி அமைச்சு |
| பியசேன, பி. எம். | .. | காணி அபிவிருத்தி |
| பியசேன, பி. எம். | .. | சுகாதாரம் |
| பியசிறி, ஜே. | .. | நீதவான் மன்றம், யாழ்ப்பாணம் |
| பொடிமகத்மயா, டபிள்மி. | .. | அரசாங்கப் பண்டசாலை |
| பொன்னம்பலம், கே. | .. | தேசிய வீடமைப்பு |
| பொத்துபிட்டிய, எஸ். | .. | கச்சேரி, களுத்துறை |
| பிரேமரத்ன, பி. | .. | கச்சேரி, கேகாலை |
| பிரேமரத்ன, எச். பி. | .. | உள்ளூராட்சி அமைச்சு |
| பிரேமரத்ன, கே. எச். ஜி. | .. | சுகாதாரம் |
| பிரேமவர்த்தன, கே. ஏ. | .. | பொலிஸ் |
| புஞ்சிநிலமே, ஈ. எம். | .. | அரசாங்க அச்சகம் |
| ராஜசிங்கம், ஜே. வி. | .. | வனபரிபாலனம் |
| ராஜேந்திரம், ஏ. | .. | குடிவரவு, குடியகல்வு |
| ராமநாதர், கே. | .. | காணி அபிவிருத்தி |
| ராமசிவம், ஏ. | .. | தொழில் |
| ரணசிங்க, ஏ. | .. | தேசிய வீடமைப்பு |
| ரணசிங்க, டபிள்யூ. கே. | .. | கச்சேரி, குருநாகல் |
| ரணதுங்க, ஆர். எம். எம். | .. | கச்சேரி, குருநாகல் |
| ரணவீர, கே. எம். | .. | மதுவரி |
| ரத்னசூரிய, ஏ. ஆர். எம். ஏ. ரி. டி. பி. | | கமத்தொழில் சேவைகள் |
| ரத்நாயக்க, கே. | .. | தேசிய வீடமைப்பு |
| ரத்நாயக்க, ஆர். எம். ஏ. | .. | ஆயுர்வேதம் |
| ரத்நாயக்க, ஆர். எம். டி. | .. | சுகாதாரம் |
| சச்சிதானந்தவேல், எஸ். | .. | கச்சேரி, யாழ்ப்பாணம் |
| சச்சிதானந்தன், ரி. | .. | மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி |
| சமன்விக்கிரம, டபிள்யூ. | .. | சுகாதாரம் |
| சமரதிவாகர, ஆர். எல். பி. | .. | .கச்சேரி, மாத்தளை |
| சமரஜீவ, பி. எச். | .. | சுகாதாரம் |
| சமரசிங்க, ஏ. கே. | .. | கணக்காய்வு |
| சமரவீர, ஆர். | .. | கடற்படை |
| சமரவீர, எஸ். | .. | கச்சேரி, அம்பாந்தோட்டை |
| சமரவிக்கிரம, எல். ரி. | .. | போக்குவரத்து அமைச்சு |
| சம்ஸன், எஸ். .. | .. | பரீட்சை |
| சரத்சந்திர, எஸ். | .. | மாவட்ட நீதிமன்றம், கண்டி |
| சரவணமுத்து, கே. | .. | இறக்குமதி, ஏற்றுமதி |
| சேனநாயக்க, டீ. | .. | கமத்தொழிற் சேவைகள் |
| சேனநாயக்க, ஆர். பி. | .. | கச்சேரி, குருநாகல் |
| சேனநாயக்க, ஆர். எஸ். ஜி. எஸ். ஏ. எம். ஆர். பி. பி. | | கச்சேரி, கேகாலை |
| செனவிரத்ன, கே. என். டீ. எஸ். | | பிசுக்கால், கொழும்பு |
| சில்வா, சீ. எல். எம். | .. | போக்குவரத்து அமைச்சு |
| சில்வா, டபிள்யூ. சீ. | .. | உள்நாட்டு இறைவரி |
| சிறிசேன, யூ. எல். | .. | கச்சேரி, கொழும்பு |
| சிறிசோம, எம். டி. | .. | தேர்தல் |
| சிறிவர்த்தன, டீ. | .. | தொழில் |
| சிறிவர்த்தன, பீ. ஏ. | .. | பதிவாளர் நாயகம் |
| சிவசுப்பிரமணியம், கே. வி. | .. | கச்சேரி, யாழ்ப்பாணம் |
| சொலங்காராச்சி, டி. வி. | .. | நீர்ப்பாசனம் |

| பெயர் | | திணைக்களம் |
|---|---|---|
| சோமபால, ஜீ. | .. | நீர்ப்பாசனம் |
| சோமபால, எம். எம். | .. | காணி ஆணையாளர் |
| சோமபால, எம. பீ. | .. | கச்சேரி, குருநாகல் |
| சோமாபால, யூ. ஏ. | .. | சுகாதாரம |
| சோமவீர, ஆர். எச். | .. | கச்சேரி, அம்பாந்தோட்டை |
| சிறியாலசிங்க, ஏ. பீ. | .. | கணக்காய்வு |
| சுகதபால, கே. ஏ. | .. | கல்வி அலுவலகம், குருநாகல் |
| சுமணதாச, ஜீ. எச். | .. | பரீட்சை |
| சுமணபால, பீ. | .. | கமத்தொழிற் சேவைகள் |
| சமனசேகர, ஆர். எம். | .. | சுகாதாரம |
| சுமணசேன, ஏ. ஏ. | .. | கச்சேரி, அம்பாந்தோட்டை |
| சுமணவீர, எல. | .. | நகரவடிவமைத்த, பாதுகாவல், குழநலத் பேணல |
| சூரியாராச்சி, எஸ். கே. ஏ. | .. | பொலிஸ் |
| சுவாமிநாதன, வி. | .. | சுகாதாரம் |
| தெலகேகொன, ரீ. எம். ரீ. பி. | .. | நீதிமன்றம், மாகோ |
| விஜ்தசேன, பி. ஜீ. | .. | கிராமாபிவிருத்தி, சிறுகைத் தொழில |
| வன்னியாராச்சி, பி. | .. | கல்வி அலுவலகம், மாத்தறை |
| வீரசிங்க, பி. | .. | பரீட்சை |
| வீரசிங்க, எஸ. ஜே. | .. | பெருந்தெருக்கள் |
| வெத்தசிங்க, எல. | .. | கச்சேரி, யாத்தறை |
| விக்ரமரத்ன, எஸ டி. டி. | .. | சுகாதாரம |
| விஜேசுந்தர, கே. | .. | மின்சாரம் |
| விஜேசூரிய, ஜீ. எஸ். பி. | .. | கச்சேரி, மாத்தளை |
| விஜேதாச, டி. | .. | கல்வி அலுவலகம், கொழும்பு தெற்கு |
| விஜேகூன், எஸ். பி. | .. | நீர்ப்பாசனம் |
| விஜேமான, ஆர். ஏ. | .. | தரைப்படை |
| விஜேரத்ன, கே. எல். எஸ். | .. | குடியியல் விமானப்போக்குவரத்து |
| விஜயதுங்க, டி. பி. ஏ. | .. | பொதுத் திறைசேரி |
| விக்ரமசிங்க, கே. கே. எஸ். | .. | அரசாங்க அச்சகம் |
| விக்ரமசிங்க, எம். கே. | .. | சுகாதாரம் |
| விலசேன, ஆர். பி. | .. | கப்பற்றுறை ஆணைக்குழு |
| வில்லியம் சிஞ்ஞோ, பி. | .. | கமத்தொழிற் சேவைகள் |
| விமலரத்ன, ஆர். பி. டி. ஜே. | .. | கச்சேரி, கொழும்பு |
| விமலசேன, பி. | .. | கூட்டுறவு |
| யசவர்த்தன, ஆர். | .. | கச்சேரி, கொழும்பு |

எச். எஸ். வணசிங்க,
பொதுநிருவாகப் பணிப்பாளர் அதிபர்.

இணைந்த சேவைகள் பிரிவு,
" ஓ " கட்டிடம,
ரொறிங்டன, சதுக்கம்,
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 10 ந் உ.

9-1025—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## கமத்தொழில் திணைக்களம்

*அரசாங்கப் பண்ணைகளுக்கு புளி மாம்பழங்கள் விநியோகித்தல், பாரங்கொடுத்தல் ஆகிய வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன*

மேற் கூறப்பட்ட விடயம் சம்பந்தமாக சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 12.10.1970 ஆம் திகதி மு. ப. 10.00 மணி வரையும் கமத்தொழில் அதிகாரி (பண்ணை முகாமையும் ஆக்கமும்) யால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் ஏற்றுக் கொள்ளப்படும்.

(1) யாழ்ப்பாணம் திண்ணவேலி கமத்தொழில் பாடசாலைப் பண்ணைக்கு பூச்சிகளால் சேதப்படுத்தப்படாத 40,000 புளி மாங்கொட்டை விதைகள.

விதை மாங்கொட்டைகள வாரத்திற்கு 7,000—8,000 விதைகள் விகிதம் விநியோகித்தல் வேண்டும்.

(2) சம்மாந்துறை கமத்தொழில் பண்ணைக்கு பூச்சிகளால் சேதப்படுத்தப்படாத 20,000 புளி மாங்கொட்டை விதைகள்.

நாளொன்றுக்கு 2,000—3,000 விதை மாங்கொட்டைகள் விகிதம் விநியோகித்தல், பாரங்கொடுத்தல் வேண்டும்.

விநியோகித்தல், பாரங்கொடுத்தல் 1970 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் முதற்கிழமையில் ஆரம்பித்து 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் முடிவடைதல் வேண்டும். பழுதடையாத விதைகளுக்கு மட்டுமே பணம் கொடுக்கப்படும். 100 கொட்டைகளுக்கு அறவிடும் தொகையே குறிப்பிட வேண்டும். புளி மாங்கொட்டை விதைகள் விநியோகிக்க வேண்டிய திகதியை ஒவ்வொரு பண்ணை முகாமையாளரும் பின்னர் அறிவிப்பர்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களிலும் செய்யும் வேலைகள் சேவைகளுக்கு வெவ்வேறான கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப் பத்திரங்களுக்கும் ரூபா 10/- வைப்புப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) கமத்தொழில் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ.) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு" ......................................... (சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்.) ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப்பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ.) தொடர்பு கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன்தினம் பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களிலும் அல்லது கமத்தொழில் இலாகா, பேராதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொந்தராத்துக் காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவித கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள மாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினால் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பபத்திரக்காரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம். யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் (ப. மு. ஆ.) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பதிரக் காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகியவற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 விதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச்

சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்த ராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்தி ரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்தி ரக்காரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தாலோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதி காரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத் தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத் தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுதையுமோ சிலபகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத் திற்கு உரிமையுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப் பட்ட, பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக் கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரியின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றி ருந்தால் மாத்திரமே இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறாத இலங்கையரல்லாத ஒரு வரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

"இலங்கையர்" என்னும் பதம் இலங்கையின் வம்சாவழி யினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும். அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பளச்சட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத் தில் வேலைபார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப் படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலைசம்பந்தமான புத்தகங்கள், சம்ப ளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வை யிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடியாக, அல்லது தபால்மூலம் அனுப்பப்பட்டால் அது அவர் களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ஆம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன்கீழ் தொழிலாளரினால் செய்யப்படும் அர சாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக் காரரே பொறுப்புடையவராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத் தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்து கொள்ள மாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணை களுக்குமுரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எம். எல். ஸி. இலங்ககோன்,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர்,
(க. பண்ணைகள்).

பேராதனை,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 12 ந் உ.

9-859—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

---

## சிறு கைத்தொழில் இலாகா

நெசவு உபகரணங்களும் இரசாயனங்களும் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் உற்பத்தியாளர்களிடமிருந்தும் உற்பத்தியாளர் பிரதிநிதி களிடமிருந்தும் 1970 ம் ஆண்டு மார்கழி 29 ம் திகதி காலை 10.00 மணிவரை, தலைவர் கேள்விப்பத்திரச் சபை, சிறு கைத்தொழில் இலாகா அவர்கள் ஏற்றுக்கொள்வார்.

மேலதிக தகவல்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் தயவு செய்து சிறுகைத்தொழில் இலாகாவுக்கு விண்ணப்பிக்கவும்.

தொடர் இல. 2/3/1/3/6,
சிறு கைத்தொழில் இலாகா,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு புரட்டாதி மீ 12 ந் உ.

எஸ். குணதீர,
பணிப்பாளர்,
சிறு கைத்தொழில் இலாகா.

9-823—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவர் 1970 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ஆம் தேதி புதன்கிழமை மு. ப. 10.00 மணிவரை, பின்வரும் வேலைக்கான பொறித்திட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

விவரணம்

(1) யா-எலைச் சாலையிலுள்ள தெருக்களுக்கும், காலைகளுக்கும் கற்பதித்துத் தாரிடல்.

பிரதம சிவில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய பத்திரங்களில், கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப் படவேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக் கொள்வதுடன், இவரின் அலுவலகத்தில் படவரைவுகளையும் பரி சீலனை செய்யலாம். ரூபா 40,000/- தொகைக்குக் குறையாத சிவில் பொறியியல் வேலைகளுக்காக இ. போ. ச. வில் அல்லது அரசாங்க திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள், தேவையான கேள்விப்பத்திரச் சாதனங்கள் வழங்கப்படுவதற்காக கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 100/- க்கான கேள்விப் பத் திரக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டையும் கேள்விப்பத்திரச் சாதனங் களுக்கு மீளளிக்கப்படமாட்டாத கட்டணமாக ரூபா 25/- க்கான பற்றுச்சீட்டையும் 1970 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ஆம் தேதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக பிரதம சிவில் பொறியியலாளருக்கு காட்டுவதன் பேரில் கேள்வியிடத் தகவுடையவர்களாயிருப்பார்கள். கேள்வி யிடுபவர்கள் தங்களது சான்றேடுகளைப் பரிசோதனைக்குக் காட்டவேண்டும். அவ்வித சான்றேடுகள் பிரதம சிவில் பொறி யியலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின், கேள்விப்பத்திரக் கட் டுப் பணத்தைக் காசாக மாத்திரம் பிரதம கணக்காள உத்தி யோகத்தரிடம் காட்டலாம்.

பிரதம சிவில் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை

200, கிருல வீதி,
கொழும்பு-5.

9-973—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925.

### கமத்தொழிற்சேவைத் திணைக்களம்

**இருபது லட்சம் புதுச் சாக்குகள் விநியோகிப்பதற்கான கேள்வி**

கொழும்பு 2, வைக்சோல் வீதியில் உள்ள கமத்தொழில், காணி அமைச்சின் கேள்விச் சபைத் தலைவரால் கமத்தொழிற் சேவைத் திணைக்களத்திற்கு இருபது இலட்சம் புதுச் சாக்குகள் விநியோகிப்பதற்கான கேள்விகள், 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ம் திகதி சனிக்கிழமை மு. ப. 10.00 மணிக்கு முன்னதாக ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கொழும்பு 7, கோட்டன் இடம், 60 ம் இலக்கத்தில் உள்ள கமத்தொழிற் சேவைத் திணைக்களத்தில் பெறக் கூடிய பத்திரங்களில், இரு பிரதிகளைக் கொண்ட கேள்வி சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெளிநாட்டுக் கேள்வியாளர்கள் பத்திரங்களை வெளி நாட்டுத் தூதுவர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

3. 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ம் திகதி நண்பகல் 12.00 மணி வரையும் பத்திரங்கள் வழங்கப்படும்.

4. விநியோகிக்கவிருக்கும் சாக்குகளில் இரு சாக்குகள் மாதிரிக்காக ("சாம்பிள்") 1970 ம் ஆண்டு 23 ம் திகதி பி. ப. 4.00 மணிக்கு முன்னதாகக் கொழும்பு 10, மருதானை பழைய புகையிரதப் பகுதி, திருனிசியா மத்திய களஞ்சியத்தில் உள்ள கமத்தொழிற் சேவை ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மாதிரிச் சாக்குகள் இல்லாமல் அல்லது மாதிரிச் சாக்குகள் காலந்தாழ்த்திக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படக்கூடும்.

5. மேலும் வேண்டிய தகவல்களை மருதானை பழைய புகையிரத யாட்டிலுள்ள திருனிசியா மத்திய களஞ்சியத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். பி. சேனநாயக்கா,
கமத்தொழிற் சேவை ஆணையாளர்.

கொழும்பு,
17. 9. 1970.

9-981—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925.

---

### பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம்

**உபயோகமற்ற ரயர்கள், ரியூப்புகள் விற்பனை**

கீழ்க் குறிக்கப்பட்டுள்ள உபயோகமற்ற பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் 1970 ஒக்ரோபர் மாதம் 10 ம் திகதி பி. ப. 2.30 மணிவரை பூகற்ப ஆராய்ச்சி ஆணையாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

இனம் : 1. பலதரப்பட்ட ரயர்கள்—84 தொகை.
2. பலதரப்பட்ட ரியூப்புகள்—67 தொகை.

1. மேற்குறித்த பொருட்களைக் காரியாலய நாட்களில் மு.ப. 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்தில் பார்வையிடக் கூடியதாக இருக்கும்.

2. கேள்விப்பத்திரங்கள் பூகற்ப ஆராய்ச்சி ஆணையாளரிடமிருந்து பெறக்கூடிய பத்திரத்தில் செய்யப்படவேண்டும். எல்லாக் கேள்விப் பத்திரங்களும் இணைப்பிரதியில் செய்யப்பட்டு ஒப்பமிடப்பட்டு சீல் இடப்பட்ட உறையில் ஆணையாளர், பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம், 48, ஸ்ரீ ஜினரத்தின வீதி, கொழும்பு 2 என முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். சீல் இடப்பட்ட கேள்விப்பத்திரம் அனுப்பும் உறையின் இடப்பக்க மேற்பகுதியில் "உபயோகமற்ற ரயர், ரியூப்புக் கொள்வனவுக்கான கேள்விப் பத்திரம்" என வரையப்பட வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்தில் வைத்திருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் போடலாம். அல்லது பதிவு செய்யப்பட்ட அஞ்சல் மூலம் அனுப்பப்படலாம்.

4. கேள்விப் பத்திரத்திற்கான கட்டணம் ரூபா 25 செலுத்தியதற்கான பற்றுச்சீட்டைக் காண்பிப்பதன் மூலம் கேள்விப் பத்திரங்கள் மூடப்படும் திகதியன்று மத்தியானம் 12 மணிவரை கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படும். அப்படியான கட்டணம் பூகற்ப ஆராய்ச்சி ஆணையாளரிடமோ அல்லது எந்தக் கச்சேரியிலோ செலுத்தலாம். உபயோகமற்ற பொருட்களின் விற்பனை திருப்திகரமாக நிறைவேறியதும் கேள்விப்பத்திரக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் அவ்வாறாக ஏற்றுக் கொள்ளப்பட்டதென அவருக்கு அறிவிக்கப்பட்ட 14 நாளுக்குள் பொருட்களின் முழுப் பெறுமதியையும் செலுத்தி அவற்றை அகற்றத் தவறினால் அவரது கேள்விப் பத்திரக் கட்டணம் இழப்பதுடன் அவரது பெயரும் "தவறிய ஒப்பந்தகாரர் பட்டியலில்" சேர்க்கப்பட நேரிடும்.

5. உபயோகமற்ற பொருட்கள் இரண்டு இனங்களாக வகுக்கப்பட்டுள்ளன. கேள்விப்பத்திரங்கள் எல்லாவற்றையும் அல்லது குறித்த ஓர் இனத்தைக் கேட்கலாம். கேட்கப்படும் தொகை இலக்க மூலமும், எழுத்து மூலமும் பத்திரத்தில் குறிக்கப்பட வேண்டும். கேள்விப்பத்திரத்தில் திருத்தங்கள், அழிப்பு போன்றவை கேள்வியாளரால் முதலெழுத்தொப்பமிடப்படல் வேண்டும்.

6. கேள்விப் பத்திரங்கள் 1970 ஒக்ரோபர் மாதம் 10 ந் திகதி பி.ப. 2.35 மணிக்கு பூகற்ப ஆராய்ச்சித் திணைக்கள காரியாலயத்தில் திறக்கப்படும். அத்தருணம் கேள்வியாளர்களைச் சமுகம் கொடுக்க அனுமதிக்கப்படும். கேள்விப் பத்திரங்களைத் திறக்கும் உத்தியோகத்தர் கேள்விப் பத்திரம் செய்தவர்களின் பெயர்களையும், தொகையையும் சமுகம் கொடுத்திருப்போருக்கு வாசிப்பார். விரும்பினால் ஆணையாளருடன் ஒழுங்கு செய்து எந்தக் கேள்விப் பத்திரத்தையும், சமர்ப்பிக்கப்படும் அதன் இணைப்பிரதியுடன் ஒப்பிட்டுப் பரிசீலனை செய்யலாம்.

7. எவ்வித காரணமுமின்றி எந்த அல்லது எல்லாக் கேள்விப்பத்திரத்தையுமோ ஏற்க மறுக்கவோ அல்லது ஒன்றின் ஓர்பகுதியை ஏற்கவோ ஆணையாளருக்கு உரிமையுண்டு.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் கேள்விப் பத்திரங்கள் மூடப்பட்ட திகதியிலிருந்து இரண்டு கிழமைக்குள் அதன் முடிவை ஏற்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

9. கேள்வியாளரில் கொடுபடவேண்டிய எல்லா அறிவித்தல்களும் அவரிடம் நேரடியாகவோ அல்லது அவரால் கொடுக்கப்பட்ட விலாசத்திற்கு தபால் மூலம் அனுப்பப்பட்டாலோ, அல்லது அவ்விடத்தில் இடப்பட்டாலோ அவருக்கு கொடுக்கப்பட்டதாகக் கருதப்படும்.

10. பூகற்ப ஆராய்ச்சி ஆணையாளருக்கு விண்ணப்பிப்பதன் மூலம் மேலதிகமான தகவல்கள் வேண்டின் பெற்றுக் கொள்ளலாம்.

எல். ஜே. டீ. பர்னாந்து,
ஆணையாளர்,
பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம்.

48, ஸ்ரீ ஜினரத்தின வீதி,
கொழும்பு 2,
13, செப்டம்பர், 1970.

9-954—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

---

### கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

**கேள்விப்பத்திர அறிவித்தல்**

வாழைச்சேனையிலுள்ள கிழக்கிலங்கை கடதாசி ஆலைக்கு 2,000 நீள் தொன் பிளீச்ட் சல்பைட் பல்ப் வழங்குவதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1970 டிசெம்பர் 7 ந் திகதி பி. ப. 2.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் மூடப்படும்.

கேள்விப்பத்திரப் படிவங்களும் மற்றும் ஏனைய விபரங்களும் உற்பத்தியாளர்களின்/வழங்குபவர்களின் பெயர்களும் மற்றும் விலாசங்களும் அடங்கிய விண்ணப்ப மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

356, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர், கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

9-991—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

## நீர்ப்பாசன இலாகா—முல்லைத்தீவு உப பிரிவு

வவுனியா வட பிரிவு பெரும்பாக பொறியியலாளர் 1970/71 நிதி ஆண்டுகளுக்கு முல்லைத்தீவு உப-பிரிவின் கீழ் பொருட்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் 1970 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 24 ஆம் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.

ரூபா 25,000 க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ இத்திணைக்களத்தில் பதிந்துள்ள கொந்தருத்துக்காரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும், அல்லது கிராம அபிவிருத்திச் சங்கங்களும் அத்துடன் தேவைக்குரிய லொறிகள் வைத்திருப்பவர்களுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

கேள்விப் பத்திரங்கள் 1970 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் 1970 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி வரை கந்தோர் நேரங்களில் நீர்ப்பாசன பொறியியலாளர் முல்லைத்தீவு உப-பிரிவு/வவுனியா உப-பிரிவு/மன்னார் உப-பிரிவு/வவுனிக்குளம் உப-பிரிவு/யாழ்ப்பாணம் உப-பிரிவு காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்களது பதிவுப் புத்தகத்துடன் இத்திணைக்களத்தில் தற்சமயம் மேற்கொண்டுள்ள வேலை விபரங்களும், தங்களிடம் இருக்கும் லொறிகளின் பதிவு விபரங்களும் அந்த லொறிகளில் ஏற்றக் கூடிய பாரம் போன்ற விபரங்களும் தர வேண்டும். இந்த விபரங்கள் அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கலாமா என்பதை நிர்ணயிக்க உதவும். வெற்றுப் பத்திரங்கள் வழங்கு முன் மேற்காட்டிய நீர்ப்பாசன பொறியியலாளர்களின் அலுவலகங்களிலோ அல்லது கச்சேரிகளிலோ கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 50 செலுத்திப் பற்றுச் சீட்டைக் காட்ட வேண்டும்.

இக்கேள்விக்கான மேலதிக விபரங்கள் யாவையும் கீழ் குறிப்பிட்டிருக்கும் நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

க. சண்முகராசா,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
முல்லைத்தீவு உப-பிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
ஒட்டுசுட்டான்.

9-950—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

---

## சிறு கைத்தொழில் இலாகா

மொரட்டுவ, வெலோனுவிலுள்ள கைத்தொழில் நிலையத்தில் சுற்று மதில் நிர்மாணிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் தலைவர், சிறு கைத்தொழில் இலாகா, கொழும்பு 1 அவர்களால் 1970 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 18 ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அரசாங்க இலாகாக்கள் ஏதாவதொன்றிலாவது கட்டிட வேலைக்கென ரூபா 25,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்களைத் தாக்கல் செய்ய விரும்புவோர் ரூபா 100 ஐ வைப்புப்பணமாக இந்த இலாகாவிலாவது அல்லது கொழும்பு தவிர்ந்த வேறெந்தக் கச்சேரியிலாவது செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டையும் அத்துடன் பதிவட்டையையும் காண்பித்து 1970 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17 ந் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

எஸ். குணதீர,
பணிப்பாளர்,
சிறு கைத்தொழில் இலாகா.

தொடர் இல.: 2/3/1/1/6
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1970, புரட்டாதி 12.

9-957—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

---

## வித்தியா பகுதி

கீழ்க்காணும் வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் 1970 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 10.30 மணி வரை யாழ்ப்பாண வட பெரும்பாக கல்வித் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| பாடசாலைப் பெயர்கள் | வேலை விபரங்கள் |
|---|---|
| (1) யா/ஸ்கந்தவரோதய கல்லூரி. | சமூகவியல் கட்டடம் அமைத்தல். |

மாவட்ட குறுக்கம்

யா—யாழ்ப்பாண மாவட்டம்

குறிப்பு.—பதிவுத்தகைமை.

மேற்கூறிய வேலைக்கு ரூபா 36,500 ம் அதற்கு மேலும்

2. இவ்வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைக்கு கல்வி அமைச்சில், பொது வேலைப் பகுதியில் அல்லது நீர்ப்பாசன திணைக்களத்தில் பதியப்பட்டவர்களுக்கு 1970 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை வடபெரும்பாக கல்வியதிபதி அவர்களால் வழங்கப்படும். (நீர்ப்பாசன திணைக்களத்தில் ரூபா 15,000 க்கும் அதற்கு குறைந்த தொகைக்கும் பதியப்பட்டவர்கள் மேற்படி வேலைகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் அல்லர்). இவ்வேலைகளுக்கு ரூபா 100/- கொழும்பு கல்வி அமைச்சு அலுவலகத்திலோ அல்லது வடபெரும்பாக கல்வித்திணைக்களத்திலோ அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள எக்கச்சேரியிலோ கட்டியதாக பற்றுச் சீட்டு வடபெரும்பாக வித்தியாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். காசோலை, மணியோடர், போஸ்ரலோடர் ஆகியன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. கேள்விப்பத்திரங்களுக்கான காசு கட்டுவதற்குரிய பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளரின் அலுவலகத்துப் பாடசாலை வேலைகள் கிளையிலிருந்து அல்லது வட பெரும்பாக கல்வியதிபதியின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பில் காண்பிக்கப்பட்டபடி பதியப்பட்டதாக அத்தாட்சி காண்பிப்பவர்களுக்கு மாத்திரமே பணமிடும் பத்திரம் வழங்கப்படும்.

3. நீர்ப்பாசனத் திணைக்களத்தில், பொதுவேலைப்பகுதியில் அல்லது கல்வி அமைச்சில் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு பதியப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இடுபணம் செலுத்துவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுமுன் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு பதியப்பட்டதாக அவை அத்தாட்சி காண்பித்து கேள்விப்பத்திர படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

4. 2 ம் 3 ம் பந்தியில் குறிப்பிட்டபடி வடபெரும்பாக வித்தியாதிபதியிடமிருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இரட்டைப் பிரதிகளில் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அக்கந்தோரிலிருந்து வேண்டிய மாதிரிப்படம் பிறவிபரங்களும் அறியலாம். கேள்விப்பத்திரங்கள் பதிவுசெய்த தபால்மூலம் தலைவர், கேள்விச்சபை, வடபெரும்பாக கல்வித்திணைக்களம், 153, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசமிட்டு அனுப்பப்படவேண்டும். உள்ளூர் விண்ணப்பக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் தபாலில் அனுப்ப விரும்பாவிடின் விண்ணப்பக்காரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ தமது கேள்விப்பத்திரங்களை அடையாள முத்திரையிட்டு யாழ்ப்பாண கல்வித் திணைக்கள நிர்வாக உதவியாளரிடம் கொடுத்துப் பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ளல் வேண்டும். மேலுறையில் விண்ணப்பக்காரரின் பெயர், விலாசம் முதலியன குறிப்பிடல் வேண்டும்.

5. 1970 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16 ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண, 153, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வட பெரும்பாக கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். விண்ணப்பக்காரர்கள் இவ்வேளையில் அங்கு பிரசன்னமாய் இருக்கலாம். அவர்களுக்கு கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்களின் பெயர்களும் விகித விபரங்களும் வாசித்து காண்பிக்கப்படும்.

6. கேள்விப் பத்திரங்களைப் பெறும் திகதி முடிவடைந்த பின்னர் ஆறு வாரங்களுக்கு தமது கேள்வியை அமுலில் வைக்க வேண்டுமென்று கேள்விப் பத்திரம் சமர்ப்பிப்போர் வேண்டப்படுவர்.

7. யாழ்ப்பாண வடபெரும்பாக கல்வித் திணைக்கள பாடசாலை வேலைகள் கிளையில் பரிசீலனைக்கென கேள்விப் பத்திரங்கள் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

8. இக் கேள்விப் பத்திரங்களுக்கு 30.9.1966 க்கு முன் கல்வித் திணைக்களத்தால் பதியப்பட்ட ஒப்பந்தக்காரப் பதிவுகள் கல்வி அமைச்சினால் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

வெ. சங்கரலிங்கம்,
கல்வியதிபதி,
வடபெரும்பாகம், யாழ்ப்பாணம்.

கல்வித் திணைக்களம்,
153, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
1970.9.17.

9-1018—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

### வன திணைக்களம்

கல்கிற்றியா ஏனைய முடிக்குரிய காணியில் 1971 ம் ஆண்டு புனர் நடுகைக்காக ஒதுக்கியுள்ள பகுதிகளிலிருந்து 15' நீளமும் 12"—18" அங்குலச் சுத்தம் கொண்ட, 7,500 கம்பங்கள் வெட்டி தனமல்வில்ல நாற்றுப் பாத்திக்கு வினியோகிப்பதற்கான கேள்விகள் காலியிலுள்ள தென்பகுதி வன உத்தியோகத்தரினுல் 1970 ம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 9 ம் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் காலியிலுள்ள தென்பகுதி வன உத்தியோகத்தரிடமிருந்து 1970 ம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 8 ம் திகதி வரை பெறக் கூடிய கேள்விப்பத்திரங்களில், இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கேள்விப் பத்திரங்கள், கேள்விப் பத்திரப் பிணைப்பணமாக 50 ரூபாச் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பித்துப் பெற வேண்டும். பிணைப்பணம் காலியிலுள்ள தென் பகுதி வன உத்தியோகத்தரின் பெயரில் காலிக் கச்சேரியில் கட்டப்பட வேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விதாரர்கள் உடன்படிக்கை கைச்சாத்திடும் திகதியிலிருந்து ஆறு வாரங்கட்குள் வேலையைச் செய்து முடித்தல் வேண்டும். மேற்கொண்டு விபரங்கள் காலி பகுதி வன உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். மயில்வாகனம்,
தென் பகுதி வன உத்தியோகத்தர்.

பகுதி வன அலுவலகம்,
காலி.

9-1020—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

### சுகாதார திணைக்களம்

*பாவனைக்கற்ற குளிர்சாதனப் பெட்டி ஏலவிற்பனை*

கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் ஹோமாகம ஆசுபத்திரிக்குரிய குளிர் சாதனப் பெட்டி ஒன்று 27. 9. 70 ம் திகதி காலை 10 மணியளவில் ஆசுபத்திரி வளவுள் பகிரங்க ஏலவிற்பனையில் விடப்படும்.

1. மண் எண்ணெய் குளிர்சாதனப் பெட்டி (இலெக்றோலக்ஸ்) மாதிரி எல். கே. 550.

அதிகக் கூடிய ஏலதாரர், உடனடியாகப் பணத்தைச் செலுத்தி குளிர்சாதனப் பெட்டியை ஆசுபத்திரியில் இருந்து எடுத்துச் செல்ல வேண்டும்.

விற்பனையில் பங்கு பற்ற எண்ணுபவர்கள் ஹோமாகம வைத்திய அதிகாரியின் அனுசரணையுடன் குளிர்சாதனப் பெட்டியை அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

எச். சி. கோமஸ்,
சுகசேவை அத்தியட்சகர்,
கொழும்பு.

சுகசேவை அத்தியட்சகர் அலுவலகம்,
83, கின்சி றோட்,
கொழும்பு.

9-855—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

### ஏல விற்பனை

கீழ் குறிப்பிட்ட மிருகங்கள் 1970 ம் வருடம் ஒக்டோபர் 10 ம் திகதி காலை 10 மணிக்கு குண்டசாலையில் உள்ள திறந்த வெளிச் சிறை முகாமில் ஏலத்தில் விற்கப்படும் :—

1 சிந்தி காளை வயது 3½ வருடம்

1 சிந்தி காளை கன்று வயது 2½ வருடம்

1 சிந்தி காளை கன்று வயது 2 வருடம்

1 ஆயர்ச்சியர் காளை கன்று வயது 1½ வருடம்

1 ஜம்னுபாரி ஆட்டுக்கிடாய் 4 வருடம்

1 ஜம்னுபாரி ஆட்டுக் கிடாய் 2½ வருடம்

1 ஜம்னுபாரி பெட்டை ஆடு 3 வருடம்

1 ஜம்னுபாரி பெட்டை ஆடு 3 வருடம்

1 ஜம்னுபாரி பெட்டை ஆட்டுக் குட்டி 6 மாதம்

குறிப்பிட்ட மிருகங்களை ஏல விற்பனைக்கு முன் தினமும் காரியாலய நேரங்களில் பார்வை இடலாம்.

எஸ். பி. அபயநாயக,
அதிகாரி.

திறந்த வெளிச்சிறை முகாம்,
குண்டசாலை,
24, ஆகஸ்டு 1970.

9–825—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

### பொலிஸ் திணைக்களம்

**பிரசித்த ஏல விற்பனை**

இதன் கீழ் குறிக்கப்பட்ட பாவித்த பொருட்கள் 1970 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் ஏல விற்பனை செய்யப்படும். இப்பொருட்களை இந்த நிலையத்தில் கந்தோர் நேரத்தில் பார்வையிடலாம். இப்பொருட்களை வேண்டியவர்கள் பணத்தை உடன் கொடுத்து பொருட்களை கொண்டுபோக வேண்டும்.

#### ஏல விற்பனையாகும் பொருட்களின் விபரம்

| | | |
|---|---|---|
| 1. | கைப்பட்டிகள் | 15 |
| 2. | குண்டாந் தடிகள் | 11 |
| 3. | குண்டு வைக்கும் தோல்பைகள் | 15 |
| 4. | தோல் பட்டிகள் | 19 |
| 5. | நீட்டு பூட்ஸ் சப்பாத்துகள் | 52 |
| 6. | காக்கி கோட் திறந்த அங்கி வக்கிள் | 8 |
| 7. | பீலித் தொப்பி | 5 |
| 8. | தொப்பிகள் | 117 |
| 9. | இன்ஸ்பெக்டர் தொப்பிகள் | 1 |
| 10. | காக்கி கட்டை கால்சட்டைகள் | 23 |
| 11. | — | — |
| 12. | தும்பு மெத்தைகள் | 30 |
| 13. | காக்கி நீட்றகை சோட்டுகள் | 10 |
| 14. | கால் பட்டிகள்—சோடி | 25 |
| 15. | பவுச | 1 |
| 16. | மழை கோட்டு பட்டிகள் | 6 |
| 17. | படுக்கை விரிப்பு | 10 |
| 18. | கட்டை கறுப்பு சப்பாத்துகள் சோடி | 198 |
| 19. | ஒரு கலன் வெற்று டின்கள் | 4 |
| 20. | 4 கலன் வெற்று டினகள் | 53 |
| 21. | சயிக்கில சீற்கள் | 3 |
| 22. | பிலிப் றேடியோ செட் | 1 |
| 23. | மேசை லாம்பு | 2 |
| 24. | மூன்று கலன் அளவு வில்டர் | 1 |
| 25. | மொனரு சயிக்கில் பெடல் | 2 |
| 26. | சயிக்கில்—றலி | 4 |
| 27. | சயிக்கில்—றட்ஜ | 1 |
| 28. | இரும்புத் தொப்பிகள் | 4 |
| 29. | காக்கி நீள கால் சட்டைகள் | 4 |
| 30. | காக்கி களுத்து திறந்த கோட | 1 |
| 31. | காக்கி மழை கோட் | 1 |
| 32. | கறுப்பு மழை கோட் | 4 |
| 33. | றேடியோ செட் பை | 1 |
| 34. | அச்சடிக்கும் கருவி—இங்கிலிஸ் எழுத்து | 1 |
| 35. | பெற்றோமக்ஸ் லாம்பு | 1 |

உதவி பொலிஸ் அதிப.,
சிலாபம்.

9-843—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925.

# அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள்

## குடிவகை உத்தரவுச்சீட்டு

1970 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதியையுடைய 20 ஆம் இலக்கத்து மதுவரிச் சட்டத்திற்கு இணங்க 1971 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முடிவடையும் உத்தரவுச்சீட்டு காலத்துக்கு, இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் பட்டோலையில் காட்டப் பட்டிருக்கும் உத்தரவுச்சீட்டுக்கு திருகோணமலை மாவட்ட அதிபருக்கு 1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 9 ஆம் திகதி நான் விண்ணப்பித் திருக்கிறேன் என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

### கூறப்பட்ட பட்டோலை

| | |
|---|---|
| விண்ணப்பதாரரின் பெயரும் விலாசமும் | பொது முகாமையாளர், இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி, கொழும்பு—10 |
| விண்ணப்பித்திருக்கும் உத்தர வுச் சீட்டின் விபரங்கள் | புகையிரதப் பகுதி விடுதிச்சாலை கள், உணவு வழங்கும் சேவை—புகையிரத பிரயாணிகளுக்குக் குடிவகை விற்பனை. (சில்லறை) |
| தற்போதைய உத்தரவுச் சீட்டைப் புதுப்பிக்கவா அல்லது புதிய உத் தரவுச்சீட்டுக்காகவா விண்ணப் பம் என்பதைக் கூறவும் | புதிய உத்தரவுச் சீட்டுக்காக. |
| உத்தரவுச்சீட்டு எடுக்கப்படும் வழ வின் இடம் | புகையிரதநிலையம், திருகோண மலை |

வீ. ரீ. நவரத்ன,
தற்காலிகப் பொது முகாமையாளர்,
இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி.

..........................
விண்ணப்பதாரியின் பெயர்.

தபால்பெட்டி இல. 355,
கொழும்பு,
1970 செத்தெம்பர், 10.

9—835—25.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,925

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

### அட்டவணை— 1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் .. | 4. 9.70 | வெள்ளி .. | 28. 8.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 11. 9.70 | வெள்ளி .. | 4. 9.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 18. 9.70 | வெள்ளி .. | 11. 9.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 25. 9.70 | வெள்ளி .. | 18. 9.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| ஒற்ரோபர் .. | 2.10.70 | வெள்ளி .. | 25. 9.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 9.10.70 | வெள்ளி .. | 2.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 16.10.70 | வெள்ளி .. | 9.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 23.10.70 | வெள்ளி .. | 16.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 30.10.70 | வெள்ளி .. | 23.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| நவெம்பர் .. | 5.11.70 | வியாழன் .. | 30.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் .. | 5.11.70 | வியாழன் .. | ந.ப. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி .. | 12.11.70 | வியாழன் .. | ந.ப. | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி .. | 20.11.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| திசெம்பர் .. | 4.12.70 | வெள்ளி .. | 27.11.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி .. | 4.12.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி .. | 10.12.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |
| | 24.12.70 | வியாழன் .. | 17.12.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் .. | 24.12.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு யூன் மீ 2 ஆந் உ

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.